# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே..........

- ஜாதகத்தில் சனி
- எண் சோதிடமும், அதன் உண்மைகளும்.
- சந்திரனின் மகத்துவமும் மனிதனும்
- ஆய்வுமன்றம்
- வானியற் காட்சிகள்

இன்னும் பல

க்ஷய ௵ மாசி ௴

(13-2-87—14-3-87)

விலை ரூபா: 3-00



உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

❋

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

க்ஷய ஞூ மாசி மீ

( 13 - 2 - 87 )

மலர் 9 || இதழ் 10

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம் |
தக்ஷ சுயக்ஞ விநாசன லிங்கம்
தத்ப்ரணமாமி சதா சிவலிங்கம் | |

ஆதியந்த மாயினு மாலவாயி லண்ணலே
சோதியந்த மாயினும் சோதியுளளார் சோதியாய்
ஓதும்வந்த வாய்மையற் கிளர் தநக்கினுர்க்கலால்
ஓதிவந்த வாய்மையாலுணர்ந் துணைக்கலாகுமே.

## கலியுக லட்சணம்

கலியுகத்தில் அதர்மம் நடக்கும் எனச் சாஸ்திரங்கள் சொல்லும்போது, ஏன் தர்மத்தைக் காப்பாற்ற முயலவேண்டும் எனும் எண்ணம் தோன்றுவதியல்பு. திருடன் வரப்போகிறான். அல்லது மழை வரப்போகிறது எனத் தெரிந்தும் நாம் ஜாக்கிரதையாக இருப்பது நன்றல்லவா? அதர்மம் வரப்போகின்றது என்று தெரிந்தும் இக்கலியுகத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். கலியுகத்தில் வரும் அதர்மங்களை தீமைகளை ஒருவன் எதிர்த்து நிற்பதால் மற்றைய யுகங்களில் கிடைக்கும் பலனைவிட கோடிபங்கு பலன் கிடைக்கும். எதிர்ப்புண்டாகும் சமயத்தில் தடுத்து நிற்பதே பெருமையாகும். மேலும் பிறர் பரிகாரம் செய்வதைப் பொருட்படுத்தாமல் கலியுகத்தில் தர்மானுஷ்டானங்களைக் கடைப்பிடித்து தர்மத்தைக் காப்பாற்றுவதே பெருமையும் சிறப்புமாகும்.

## மஹாசிவராத்திரி

மகாப்பிரளயகாலம் முடிவுற்றசமயம் இறைவன் உருவமற்ற நிலையில் இருந்ததனுல் சகல ஜீவராசிகளும் உயிர்த்துடிப்பின்றி இருந்தபோது சர்வலோக மாதாவாகிய சக்தி இறைவனை அருளாட்சி செய்யும்வண்ணம் உருவமற்ற லிங்கவடிவில் நான்கு காலங்கள் பூஜித்தார். இவ்வாறு இறைவி பூஜித்தபயனுல மனமகிழ்வுற்ற இறைவன் சக்தியின் விருப்பிற்கிணங்க ஜீவராசிகள் நற்பேறடையும் வண்ணம் வரமளித்தார் எனவும், பிரமவிஷ்ணுக்கள் சோதிவடிவின் அடிமுடியைத் தேடி முடிவில் அயர்வடைந்து இறைவனின் ஜோதிவடிவலிங்க உருவத்தைத் தரிசித்து நன்மையடைந்தனர் எனவும் புராணங்கள் கூறும். இம் மகாசிவராத்திரி தினத்தில் நாமும் திரயோதசியும் சதுர்த்தசியும் சேரும் நடுநிசியடங்கிய இரவை கண்விழித்து இறைவனுக்குரிய அபிஷேக ஆராதனைகளைத் தரிசித்து மறுநாள் உதயத்தில் கர்மானுஷ்டானங்களை முடித்து பூசனைசெய்து சிவராத்திரி விரதபலனைப் பெற முயற்சிப்போமாக.

## மாசிமகம்

இறைவனின் திருவுளப்படி அம்பிகை தக்கன் மகளாகப் பிறப்பதற்காக, காளிந்தி நதியில் ஒரு தாமரைப்பூவில் வலம்புரிச்சங்கு வடிவமாக தோன்றினுர். மாசிமக நட்சத்திரமாகிய அன்று தக்கன் அந் நதிக்கு நீராடிவந்தபோது அச்சங்கை எடுத்தபோது அது ஓர் அழகிய பெண்குழந்தையாக மாறியது. இதனுல் அம்பாள் பூமியில் அவதரித்த தினமாகக் கொண்டு அம்பாள் ஆலயங்களில் உற்சவங்கள் செய்து புண்ணியதீர்த்த நீராடலும் நடைபெற்று வருவதே இத்தினத்திற்குரிய சிறப்பாகும். மக்கள் தாம் செய்யும் பாபங்களைக் கழுவிப் புனிதநதிகளில இத்தினத்தில் நீராடுவதால் பாபங்கள் நலிந்து புண்ணிய பலன்களைப் பெறுகின்றனர்.

# நாள் எப்படி?

மாசி 1 வெள் (13-2-87) பூரணை பி.இ. 2-28 வரை, ஆயிலியம் பி.இ. 12-38 வரை, மரணம் பூரணை விரதம் அசுபதினம். ராகு 11-04 — 12-34

மாசி 2 சனி (14-2-87) பிரதமை பி.இ. 3-48 வ. மகம் பி.இ. 2-30 வரை, அமிர்தசித்தம். அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-34 — 11-04

மாசி 3 ஞாயி (15-2-87) துவிதியை இரவு 4-45 வ. பூரம் பி.இ. 4-00 வரை. சித்தாமிர்தம், சுபகருமங்களை விலக்குக. ராகு 4-34 — 6-04

மாசி 4 திங் (16-2-87) திரிதியை பி.இ. 5-19 வரை உத்தரம் பி.இ. 5-18 வரை, சித்தம். சுபகருமங்களுக்கு நன்று. ராகு 8-03 — 9-33

மாசி 5 செவ் (17-2-87) சதுர்த்தி பி.இ. 5-28 வரை அத்தம் பி.இ. 5-53 வரை, சித்தம், சுபதினமன்று ராகு 3-33 — 5-01

மாசி 6 புத (18-2-87) பஞ்சமி பி.இ. 5-12 வரை, சித்திரை பி.இ. 6-12 வரை, சித்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 12-33 — 2-03

மாசி 7 வியா (19-2-87) ஷஷ்டி பி.இ. 4-27 வரை. சுவாதி பி.இ. 6-04 வரை, அமிர்தசித்தம. சுபகருமங்கட்கு உகந்தது. ராகு 2-02 — 3-32

மாசி 8 வெள் (20-2-87) ஸப்தமி – சித்தம் பி.இ. 3-14 வரை, விசாகம் பி.இ. 5-28 வரை. அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 11-02 — 12-32

மாசி 9 சனி (21-2-87) அஷ்டமி பி.இ. 1-32 வரை. அனுஷம் பி.இ. 4-25 வரை. சித்தம், அசுபதினம். ராகு 9-32 — 11-02

மாசி 10 ஞாயி (22-2-87) நவமி இரவு 11-24 வ. கேட்டை – மரணம் பி.இ. 2-55 வரை; சுபதினமன்று. ராகு 4-31 — 6-01

மாசி 11 திங் (23-2-87) தசமி இரவு 8-52 வரை, மூலம் – சித்தம் பி.இ. 1-30 வரை. அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 8-01 — 9-31

மாசி 12 செவ் (24-2-87) ஏகாதசி மாலை 6-03 வ. பூராடம் – சித்தம் இரவு 10-55 வரை, ஸர்வ ஏகாதசிவிரதம், அசுபதினம். ராகு 3-31 — 5-01

மாசி 13 புத (25-2-87) துவாதசி பகல் 3-02 வரை, உத்தராடம் இரவு 8-38 வரை, அமிர்தசித்தம், பிரதோஷவிரதம். சுபகருமங்கள் செய்யலாம். ராகு 12-30 — 2-00

மாசி 14 வியா (26-2-87) திரயோதசி பகல் 12-00 வ. திருவோணம் மாலை 6-20 வரை, சித்தம்; மஹா சிவராத்திரி. சுபகருமங்கட்கு உகந்ததல்ல. ராகு 2-00 — 3-00

மாசி 15 வெள் (27-2-87) சதுர்த்தசி காலை 9-02 வ. அமாவாசை பி.இ. 6-21 வரை, அவிட்டம் மாலை 4-11 வரை. சித்தம், அமாவாசைவிரதம், அசுபதினம். ராகு 11-00 — 12-30

மாசி 16 சனி (28-2-87) பிரதமை பி.இ. 4-04 வ. சதயம் – அமிர்தம் பகல் 2-21 வரை, கரிநாள், அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-29 — 10-59

மாசி 17 ஞாயி (1-3-87) துவிதியை பி.இ. 2-24 வ. பூரட்டாதி பகல் 12-58 வரை. சித்தாமிர்தம், கரிநாள், அசுபதினம். ராகு 4-59 — 6-29

மாசி 18 திங் (2-3-87) திரிதியை பி.இ. 1-17 வரை. உத்தரட்டாதி பகல் 12-11 வரை. சித்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 7-59 — 9-29

மாசி 19 செவ் (3-3-87) சதுர்த்தி பி.இ. 12-58 வ. ரேவதி பகல் 12-06 வரை, அமிர்தசித்தம். சதுர்த்திவிரதம், வயற்செய்கைகள் மேற்கொள்ளலாம். ராகு 3-27 — 4-57

மாசி 20 புத (4-3-87) பஞ்சமி பி.இ. 1-31 வரை. அசுவினி – மரணம் பகல் 12-46 வரை, சுபதினமன்று. ராகு 12-27 — 1-57

மாசி 21 வியா (5-3-87) ஷஷ்டி பி.இ. 2-40 வரை, பரணி பகல் 2-08 வரை, மரணம், ஷஷ்டிவிரதம், கார்த்திகைவிரதம், அசுபதினம். ராகு 1-57 — 3-27

மாசி 22 வெள் (6-3-87) ஸப்தமி பி.இ. 4-25 வ. கார்த்திகை சித்தம் மாலை 4-11 வரை, சுபதினமன்று. ராகு 10-56 — 12-06

மாசி 23 சனி (7-3-87) அஷ்டமி முழுவதும், ரோகிணி மாலை 6-48 வரை, அமிர்தசித்தம், சுபதினமல்ல. ராகு 9-26 — 10-56

மாசி 24 ஞாயி (8-3-87) அஷ்டமி காலை 6-38 வ. மிருகசீரிடம் இரவு 9-36 வரை, மரணம். சுபகருமங்களை விலக்குக. ராகு 4-56 — 6-26

மாசி 25 திங் (9-3-87) நவமி காலை 9-07 வரை. திருவாதிரை பி.இ. 12-34 வரை சித்தாமிர்தம். சுபதினமன்று. ராகு 7-55 — 9-25

மாசி 26 செவ் (10-3-82) தசமி பகல் 11-35 வரை. புனர்பூசம் பி.இ. 3-25 வரை. சித்தம், வயற்செய்கைகட்கு நன்று. ராகு 3-25 — 4-55

மாசி 27 புத (11-3-87) ஏகாதசி பகல் 1-52 வரை, பூசம் பி. இ. 6-00 வரை, சித்தம், ஸர்வஆமலக ஏகாதசிவிரதம் சுபகருமங்களுக்கு நன்று.
ராகு 12-25 – 1-55

மாசி 28 வியா (12-3-87) துவாதசி பகல் 3-48 வரை ஆயிலியம் முழுவதும், சித்தம், அசுபதினம்.
ராகு 1-54—3-24

மாசி 29 வெள் (13-3-87) திரயோதசி மா. 5-16 வ. ஆயிலியம் காலை 8-10 வரை, மரணம், மாசிமகம் பிரதோஷவிரதம், அதிபதினம்.
ராகு 10-53—12-03

மாசி 30 சனி (14-3-87) சதுர்த்தசி மாலை 6-15 வ. மகம் காலை 9-53 வரை, அமிர்தசித்தம், காரடையாநோன்பு, சுபகருமங்கட்கு நன்று.
ராகு 9-21—10-51

---

## இலங்கை சோதிட ஆய்வு மன்றம்

ஷை மன்றத்தின் 6-வது வருடாந்தக்கூட்டம் 25-1-87ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை 10-00 மணியளவில் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஆரம்பமானது. அதில் பொதுச் செயலாளரால் சென்றகூட்ட அறிக்கையும் பொருளாளரால் பொருள்நிலை அறிக்கையும் வாசிக்கப்பட்டு சரியென ஏற்று தலைவரால் கைச்சாத்திடப்பட்டது.

ஷை மன்ற அமைப்புவிதிகளில் இரு போசகர்கள் சேர்க்கப்படவேண்டுமென்று திரு. எஸ். எஸ். நடராசாவினால் பிரேரிக்கப்பட்டு திரு. வே. சின்னத்துரையால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறிற்று. பின்னர் நல்லைஆதீன சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளையும் மாவிட்டபுர ஆதீன சிவஸ்ரீ து. சண்முகநாதக் குருக்களையும் போசகர்களாக கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் பிரேரித்து திரு. எஸ். எஸ். நடராசாவால ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறிற்று. பின்னர் தலைவராக கலாநிதி நா. சுப்பிரமணியஐயரை திரு. ம. கனகரத்தினம் பிரேரித்து திரு. சி. சிவஞானசம்பந்தன் ஆமோதித்து நிறைவேறிற்று. உப தலைவர்களாக பிரமஸ்ரீ எஸ் மகேஸ்வர ஐயரையும் திரு. க. சாம்பசிவம அவர்களையும பொதுச் செயலாளராக திரு. எஸ். எஸ். நடராசா அவர்களையும் உபசெயலாளராக திரு. ஐயா சச்சிதானந்தம் அவர்களையும், பொருளாளராக திரு. வே. சின்னத்துரை அவர்களையும்தெரிவு செய்யப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரியப்பட்டனர். திரு. ம. கனகரத்தினம் திரு. சி. சிவஞானசம்பந்தன், திரு. எஸ் சிதம்பரநாதக்குருக்கள், திரு. கு. இரத்தினேஸ்வரன், திரு. அ. தம்பித்துரை, திரு. எஸ். கே. என். தவராசா, திரு பி சேனாதிராசா, திருமதி பி. சோமசுந்தரம், திரு. எல். செல்வானந்தம்.

பின்னர் திரு. சி. சிவஞானசம்பந்தனால் கேந்திராதிபத்திய தோசம் என்னும் ஆய்வுக்கட்டுரை வாசிக்கப்பட்டது. அவர் அதனை பல்வேறு உதாரண சாதகங்கள்மூலம் விளக்கினார். அதுதொடர்பாக பல அங்கத்தவர்கள் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். பின்னர் விசேட நிகழ்ச்சியாக வடஇந்திய பேராசிரியர் டாக்டர் முலேயினால் வீடுகளில் ஓமம் வளர்த்தல்எனும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தப்பட்டது. அவர் அதனை செய்கை முறையினாலும் விபரமாகக் காட்டி அதனால் நாம் அடையும் பலாபலன்களை விளக்கிச் சபையோரை மகிழ்வித்தார். அன்னாரின் அரிய சாதனையை பாராட்டி செயலாளர் அவருக்கு மன்ற சார்பில் நன்றியும் கூறினார். பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டமினிது நிறைவேறிற்று.

---

## வியாழன் சஞ்சாரம்

சகல சுபகருமங்களுக்கும் பணம் பொருள் முதலியவற்றுக்கும் அதிபதியாக இருப்பவர் வியாழன். இவர் 3-2-87ல் மீனராசியில் பிரவேசித்துள்ளார். மீனராசி வியாழனுக்கு ஆட்சி வீடாகும். எனவே மீனராசியில் ஒருவருடகாலம் தாமதித்து நின்றால் உலகில நற்பலன்கள் அதிகரித்து நியாயம், நீதி, பொருள் விருத்தி முதலியன ஏற்படும்.

ஆனால் அவர் அதிவேகமாக நகர்ந்து 16-6-87 இல் மீனராசியைக் கடக்கிறார். அத்துடன் மீனத்தில் ராகுவுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் நன்மையான பலன்களை எதிர்பார்க்கமுடியாது. உலகில் நியாயம், நீதி என்பனவற்றுக்கு இடம்கிடையாது. 16-6-87ல் மேடராசியிற் பிரவேசிக்கும் வியாழன் 26-10-87ல் வக்கிரகதியில் மீனராசிக்கு வந்து, பின்னரும். 8-2-88ல் மேடராசியிற்பிரவேசிக்கிறார்.

ஆகவே 1987-ம் ஆண்டில் உலகில் நற்பலன் குறைந்து காணும். அடக்கு முறைகளும், அநீதியும் தாண்டவமாடும். மக்களெல்லாம் ஆலயங்களில் வியாழபகவானைப் பிரார்த்தித்து தமது இன்னல்களை நீக்க வேண்டுதல் செய்தல் நன்று.


## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

க்ஷய ஹூ மாசி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (13-2-87 முதல் 14-3-87 வரை)

| இங். பெப் | தமி. மாசி | வாரம் | கும்பம் ம.மி. முதல் (காலை) | கும்பம் ம.மி. வரை (காலை) | மீனம் ம. மி. வரை (காலை) | மேடம் ம. மி. வரை (பகல்) | இடபம் ம. மி. வரை (பகல்) | மிதுனம் ம. மி. வரை (பி.ப) | கடகம் ம. மி. வரை (மாலை) | சிங்கம் ம. மி. வரை (இரவு) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலா ம. மி. வரை (இரவு) | விருச்சிகம் ம. மி. வரை (பி.இ) | தனுசு ம. மி. வரை (பி.இ) | மகரம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | வெள் | 6 34 | 8 19 | 10 1 | 11 51 | 1 53 | 4 4 | 6 12 | 8 13 | 10 11 | 12 15 | 2 26 | 4 34 | 6 30 |
| 14 | 2 | சனி | 6 31 | 8 15 | 9 57 | 11 47 | 1 49 | 4 0 | 6 8 | 8 9 | 10 7 | 12 11 | 2 22 | 4 30 | 6 26 |
| 15 | 3 | ஞாயி | 6 27 | 8 12 | 9 54 | 11 44 | 1 46 | 3 57 | 6 5 | 8 6 | 10 4 | 12 8 | 2 19 | 4 27 | 6 23 |
| 16 | 4 | திங் | 6 24 | 8 8 | 9 50 | 11 40 | 1 42 | 3 53 | 6 1 | 8 [illegible] | 10 0 | 12 4 | 2 15 | 4 23 | 6 19 |
| 17 | 5 | செவ் | 6 20 | 8 4 | 9 46 | 11 36 | 1 38 | 3 49 | 5 57 | 7 58 | 9 56 | 12 0 | 2 11 | 4 19 | 6 15 |
| 18 | 6 | புதன் | 6 16 | 8 0 | 9 42 | 11 32 | 1 34 | 3 45 | 5 53 | 7 54 | 9 52 | 11 56 | 2 7 | 4 15 | 6 11 |
| 19 | 7 | வியா | 6 12 | 7 56 | 9 38 | 11 28 | 1 30 | 3 41 | 5 49 | 7 50 | 9 48 | 11 52 | 2 3 | 4 11 | 6 7 |
| 20 | 8 | வெள் | 6 8 | 7 53 | 9 35 | 11 25 | 1 27 | 3 38 | 5 46 | 7 47 | 9 45 | 11 49 | 2 0 | 4 8 | 6 4 |
| 21 | 9 | சனி | 6 5 | 7 49 | 9 3 | 11 21 | 1 23 | 3 34 | 5 42 | 7 43 | 9 41 | 11 45 | 1 56 | 4 4 | 6 0 |
| 22 | 10 | ஞாயி | 6 1 | 7 44 | 9 26 | 11 16 | 1 18 | 3 29 | 5 37 | 7 38 | 9 36 | 11 40 | 1 51 | 3 59 | 5 55 |
| 23 | 11 | திங் | 5 56 | 7 41 | 9 23 | 11 13 | 1 15 | 3 26 | 5 34 | 7 35 | 9 33 | 11 37 | 1 48 | 3 56 | 5 52 |
| 24 | 12 | செவ் | 5 53 | 7 37 | 9 19 | 11 9 | 1 11 | 3 22 | 5 30 | 7 31 | 9 29 | 11 33 | 1 44 | 3 52 | 5 48 |
| 25 | 13 | புதன் | 5 49 | 7 33 | 9 15 | 11 5 | 1 7 | 3 18 | 5 26 | 7 27 | 9 25 | 11 29 | 1 40 | 3 48 | 5 44 |
| 26 | 14 | வியா | 5 45 | 7 29 | 9 11 | 11 1 | 1 3 | 3 14 | 5 22 | 7 23 | 9 21 | 11 25 | 1 36 | 3 44 | 5 40 |
| 27 | 15 | வெள் | 5 41 | 7 25 | 9 7 | 10 57 | 12 59 | 3 10 | 5 18 | 7 19 | 9 17 | 11 21 | 1 32 | 3 40 | 5 36 |
| 28 | 16 | சனி | 5 37 | 7 21 | 9 3 | 10 53 | 12 55 | 3 6 | 5 14 | 7 15 | 9 13 | 11 17 | 1 28 | 3 36 | 5 32 |
| மார்ச் 1 | 17 | ஞாயி | 5 33 | 7 17 | 8 59 | 10 49 | 12 51 | 3 2 | 5 10 | 7 11 | 9 9 | 11 13 | 1 24 | 3 32 | 5 28 |
| 2 | 18 | திங் | 5 29 | 7 13 | 8 55 | 10 45 | 12 47 | 2 58 | 5 6 | 7 7 | 9 5 | 11 9 | 1 20 | 3 28 | 5 24 |
| 3 | 19 | செவ் | 5 25 | 7 9 | 8 51 | 10 41 | 12 43 | 2 54 | 5 2 | 7 3 | 9 1 | 11 5 | 1 16 | 3 24 | 5 20 |
| 4 | 20 | புதன் | 5 21 | 7 5 | 8 47 | 10 37 | 12 39 | 2 50 | 4 58 | 6 59 | 8 57 | 11 1 | 1 12 | 3 20 | 5 16 |
| 5 | 21 | வியா | 5 17 | 7 1 | 8 43 | 10 34 | 12 35 | 2 46 | 4 54 | 6 55 | 8 53 | 10 57 | 1 8 | 3 16 | 5 12 |
| 6 | 22 | வெள் | 5 13 | 6 57 | 8 39 | 10 30 | 12 31 | 2 42 | 4 50 | 6 51 | 8 49 | 10 53 | 1 4 | 3 12 | 5 8 |
| 7 | 23 | சனி | 5 9 | 6 53 | 8 35 | 10 26 | 12 27 | 2 38 | 4 46 | 6 47 | 8 45 | 10 49 | 1 0 | 3 8 | 5 4 |
| 8 | 24 | ஞாயி | 5 5 | 6 49 | 8 31 | 10 22 | 12 23 | 2 34 | 4 42 | 6 43 | 8 41 | 10 45 | 12 56 | 3 4 | 5 0 |
| 9 | 25 | திங் | 5 1 | 6 45 | 8 27 | 10 18 | 12 19 | 2 30 | 4 38 | 6 39 | 8 37 | 10 41 | 12 52 | 3 0 | 4 56 |
| 10 | 26 | செவ் | 4 57 | 6 41 | 8 23 | 10 14 | 12 15 | 2 26 | 4 34 | 6 35 | 8 33 | 10 37 | 12 48 | 2 56 | 4 52 |
| 11 | 27 | புதன் | 4 53 | 6 37 | 8 19 | 10 10 | 12 11 | 2 22 | 4 30 | 6 31 | 8 29 | 10 33 | 12 44 | 2 52 | 4 48 |
| 12 | 28 | வியா | 4 59 | 6 33 | 8 15 | 10 6 | 12 7 | 2 18 | 4 26 | 6 27 | 8 25 | 10 29 | 12 40 | 2 48 | 4 44 |
| 13 | 29 | வெள் | 4 45 | 6 29 | 8 11 | 10 2 | 12 3 | 2 14 | 4 22 | 6 23 | 8 21 | 10 25 | 12 36 | 2 44 | 4 40 |
| 14 | 30 | சனி | 4 41 | 6 26 | 8 8 | 9 59 | 12 00 | 2 11 | 4 19 | 6 20 | 8 18 | 10 22 | 12 33 | 2 41 | 4 37 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு நாளின் ஞானமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: மாசி 30 உ (14-3-87) பகல் 11-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதைக் கவனிக்க. (9-59—12-00) இடபலக்னம்.

# மாசி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

13உ (25-2-87) பி இ. 3-05க்கு மகர-சுக்

8உ புதன் வக்ராரம்பம்.

10உ புதன் அஸ்தமனம்.

21உ புதன் உதயம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாசி | 1உ | (13-2-87) | பி.இ. | 12-38 | முதல் | சிங்கம் |
| | 4உ | (16-2-87) | பகல் | 10-18 | ,, | கன்னி |
| | 6உ | (18-2-87) | மாலை | 6 06 | ,, | துலாம் |
| | 8உ | (20-2-87) | இரவு | 11-37 | ,, | விருச்சிகம் |
| | 10உ | (22-2-87) | பி.இ. | 2-55 | ,, | தனுசு |
| | 12உ | (24-2-87) | பி. இ. | 4-21 | ,, | மகரம் |
| | 14உ | (26 2-87) | பி இ. | 5-12 | ,, | கும்பம் |
| | 17உ | (1-3-87) | காலை | 5-50 | ,, | மீனம் |
| | 19உ | (3-3-87) | பகல் | 12-06 | ,, | மேடம் |
| | 21உ | (5-3 87) | இரவு | 8-36 | ,, | இடபம் |
| | 24உ | (8-3 87) | காலை | 6-20 | ,, | மிதுனம் |
| | 26உ | (10-3 87) | பி.இ. | 8-43 | ,, | கடகம் |
| | 29உ | (13-3-87) | காலை | 8-10 | ,, | சிங்கம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி மாசி மீ 30 உ பகல் 11-30 மணிக்கு இடப லக்னம் என அறிந்து கொண்ட பின் 'இடபம்' என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது தனுலக்கினம் உதயமாகிறது. லக்கினாதிபதி 4-ம் வீட்டில் ஆட்சி பெற்றிருப்பினும் இராகுவுடன் சேர்ந்திருப்பதால் நாட்டில் அமைதி ஏற்படுவது கஷ்டம். ஆயினும் செவ்வாய் ஆட்சி வீட்டில் சஞ்சரிப்பதால் தமிழர்களுக்கு சற்று சாதகமான நிலை ஏற்படலாம்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீட்சை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (மாசி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 34 நிமிஷம்)

| வாரம் | 6...34 7...34 | 7...34 8...34 | 8...34 9...34 | 9...34 10...34 | 10...34 11...34 | 11...34 12...34 | 12...34 1...34 | 1...34 2...34 | 2...34 3...34 | 3...34 4...34 | 4...34 5...34 | 5...34 6...34 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# ஆய்வு மன்றம்

சி. இரஞ்சிதமலர் 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

உமது சாதகத்தின்படி சூரியன் மேடத்தில் 20 பாகை 26 கலையிலும் வியாழன் மேடத்தில் 8 பாகை 4 கலையிலும், சுக்கிரன் மேடத்தில் 6 பாகை 34 கலையிலும் இருக்கிறார்கள். குரு, சூரியனிலிருந்து 11 பாகைக்கு மேலும் சுக்கிரன் சூரியனிலிருந்து 9 பாகைக்கு மேலும் சஞ்சாரம் நிகழ்வதால் இவர்களுக்கு அஸ்தமனமென்று சொல்ல முடியாதே! யுரேனஸ் மிதுனத்திலும் நெப்ரியூன் கன்னியிலும், புளுட்டோ கடகத்திலும் இருக்கிறார்கள். உறவினரைத் திருப்திப்படுத்த எண்ணங்களைச் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுக் கொண்டு இருப்பதால் திருமணத்தடைகள் ஏற்படுகின்றன.

இளமதி, தெல்லிப்பழை.

குடும்பாதிபன் 8லும் குடும்பத்தானத்தில் செவ்வாயும் இருந்து இருவர்கள் ஒருவரை ஒருவர் திருஷ்டி செய்வதால் பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்படவே செய்யும். பிடிவாதக் குணத்தை விட்டு குடும்பப் பொறுப்புக்களிலும் விட்டுக்கொடுத்து வாழத் தொடங்கினால் எல்லாப் பிரச்சினைகளும் விரைவில் நீங்கிவிடும். சந்தோஷமுண்டாகும்.

மு. பாலசுப்பிரமணியம்.
கும்பாவெளி மந்துவில், கொடிகாமம்.

உமது சென்னநேரம் குறித்த திகதியில் காலை 9மணி 46 நிமிஷமாக இருப்பின் அப்போது சந்திரன் மகரராசியில் 23 பாகை 18 கலையில் இருப்பான். எனவே (சென்ன நட்சத்திரப்) திருவோணம் முடிய இன்னும் 12 கலைகள் இருக்கின்றன. சந்தேகம் வேண்டாம். நட்சத்திரம் திருவோணம் 4-ம் பாதம்தான்.

தங்கராஜா ராஜ்னேந்த். ஞானிமடம், பூநகரி.

விண்ணப்பப் படிவத்திலுள்ள கிரக நிலையையும் பூர்த்திபண்ணி அனுப்பாமையால் பலன்கூற முடியாதே!

அ. லோகேஸ்வரன்.
செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.

குருபகவானின் இராசி மாற்றத்துடன் வேறு வேலைகளும் செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும். செலவுகள் ஏற்பட்டாலும் முன்னேற்றமும் கிட்டும்.

கனகசபை ஞானசீலன்.
6-ம் வட்டாரம், புங்குடுதீவு.

உமது சென்னகாலம் சரியாக இருப்பின் அந்த நோத்துக்கு நட்சத்திரம் அத்தம் 1-ம் பாகமாக இருக்கும். இப்படியே கிரகநிலையிலும் சுத்தகணிப்பின்படி மீனத்தில் சனியும், புதன் கடகத்திலுமாக மாற்றி அமைக்க வேண்டும். சாதகத்தைச் சரியாகச் சுத்தகணித முறையில் கணிக்காமல் எப்படிப் பலன் கூறமுடியும்.

சி. ச. சி. மனோஜ்குமார்.
67, மெயின் வீதி, திருமலை.

(1) பதவி உயர்வும் அல்லது வேறுபதவிகளும் எப்போதும் பேச்சளவிலேயே இருக்கும். அப்படிக் கிடைப்பதாயின் 19 8-ம் ஆண்டுக்குப்பின் கிடைக்கச் சந்தர்ப்பம் உண்டு.

(2) சகடயோக சாதகம். குரு மாற்றம் பற்றி "மாமுனி ஆறிலே இருகாலிலே தளை பூண்டதும்" என்ற பாடல் பலனில் கூறுகிறது. ஏழரைச் சனியின் காலமும் தொடருவதால் கஷ்டநட்டங்கள் தொடரவே செய்யும். தெய்வ பக்திவழிபாட்டால் எதனையும் வென்றுவிடலாம். உயிராபத்தும் வராது.

எஸ். செந்தில்குமார்.
47/23, சமிட்புர மட்டக்குளி, கொழும்பு.

உமது சென்னகாலம் 1954-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 28-ம் திகதிக்குச் சரியான ஜய ஞு சித்திரை மாதம் 15ம் திகதி புதன்கிழமை பகல் 11 மணி 20 நிமிஷமாய் இருப்பின் சென்னகாலம் இராகுதசையில் இருப்பு ஞு 14மீ 02. நாள் 19 எனத்திருத்துக. இதனைச் சேர்த்து நடப்பு மகாதசை புத்திகளைக் கணக்கிட்டு பலனை அறிக. மேலும் கடக லக்கின காரருக்குச் சுக்கிரன் பாதகாதிபதி என்பதையும் தெரிவிக்கின்றோம்.

ஆ. நவரத்தினராசா.
லக்ஷபான வீதி, வவுனியா.

ஏழரைச் சனீஸ்வரனின் காலத்துடன் குருவின் குரூர கோசாரசஞ்சாரமும் சேரக்கஷ்ட நட்டங்கள் வந்தன. 1988-ல் இருந்து உமது தொழிலில் முன்னேற்றம் பெற வாய்ப்புக்கள் கிட்டும்.

எஸ். எஸ். பிரபாகரன். யாழ்ப்பாணம்.

முயன்றால் உயர்கல்வி பெற வாய்ப்புகள் கிடைக்கும். பட்டத்தையொட்டிய தொழிலும் விரைவில் கிடைக்கும்.

# மாசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

13-2-87 — 14-3-87

சூரியன்: 13-2-87 அதிகாலை 4-00 கும்பராசிப் பிரவேசம்.
13-2-87 உதயம் காலை 6-34
அஸ்தமனம் மாலை 6-15
14-3-87 உதயம் காலை 6-24
அஸ்தமனம் மாலை 6-18

சந்திரன்: 14-2-87 பூரணை பின்இரவு 2-28
22-2-87 அபரஷ்டமி பின்னிரவு 1-32
28-2-87 அமாவாசை அதிகாலை 6-21
1-3-87 சந்திர தரிசனம்
8-3-47 பூர்வாஷ்டமி காலை 6-88

## கிரகங்கள்

புதன்: மாதாரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் 18 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் 18 2 87 வக்கிரகதியடைந்து 22-2-87ல் அஸ்தமனமடையும் 5-3-87ல் கிழக்கில் உதயமாகும். 12-3-87ல் வக்கிரகதி நீங்கி நேர் கதியிற் செல்லும். மாத முடிவில் சூரிய உதயம் முன் கிழக்கு வானில் 23 பாகை உயரத்தில் காணப்படும். இம்மாசம் முழுவதும் கும்பராசியிற் சஞ்சரிக்கிறது.

சுக்கிரன்: இப்பொழுது காலை வெள்ளியாக தோற்றும் இக்கிரகம் மாதாரம்பத்தில் கிழக்கில் உதயம் முன் 45 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 40 பாகை உயரத்திற் காணப்படும். 25-2 87-ல் மகரராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 59 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 52 பாகை உயரத்திற் காணப்படும். இம்மாசம் முழுவதும் மேடராசியிற் சஞ்சரிக்கிறது.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 32 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 11 பாகை உயரத்திற் காணப்படும். இம்மாசம் முழுவதும் மீனராசியிற் சஞ்சரிக்கிறது.

சனி:- மாத ஆரம்பத்தில் உதயம் முன் கீழ் வானில் 64 பாகை உயரத்தில் தோற்றும். இக்கிரகம் மாதமுடிவில் உச்சியிற் காணப்படும்.

இந்திரன்:- தனுராசியில் மூலம் 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன்:- தனுராசியில் பூராடம் 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன்:- துலாராசியில் சுவாதி 3-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

18-2-87 மாலை சந்திரனுக்குத் தெற்கு 1 பாகையில் சித்திரை நஷத்திரம் சந்திரோதயமானதும் அவதானிக்கவும்.

21-2-87 பின் இரவு சந்திரனுக்குத் தெற்கில் ஒட்டினாற்போல கேட்டை நக்ஷத்திரம் காட்சியளிக்கும்.

22-2-87 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு சனி 6 பாகை. சந்திரோதயம் பின் அவதானிக்கவும்.

24-2-87 நள்ளிரவு சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 7 பாகை சந்திரோதயம் பின் அவதானிக்கவும்.


1 3 87 மாலை சந்திரனின் தெற்குப் பாகத்தில் ஒட்டினாற்போல வியாழன், சந்திரதர்சனத்துடன் அவதானிக்கவும்.

4-3 87 மாலை சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 2 பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

முக்கிய குறிப்பு:

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ-ர்




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

## 13-2-87 முதல் 14-3-87 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

**அசுவினி, பரணி, கார்த்திகை !**

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் (11ல்)லாபத்தில் லோகமூர்த்தியாகி வலம்வருவது நன்மை தீமைகள் கலந்த சமபலன்களையே கொடுப்பார். இவர்களின் தேகாரோக்கியம் இடைக்கிடை பாதிக்கப்பட்டாலும் ஓரளவு சீராகவே இருக்கும். குடும்ப வருமானங்களும் திருப்தியாக இருக்கும். பெரியவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். தூரதேசத்து உறவினரின் உதவிகளும் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணங்களும் கிடைக்கும். ஆனல் இராசாங்க அதிகாரிகளின் பகை விரோதங்களும் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை,

குடும்பத்தில் நல்லுறவும் சிறுசிறு பிரச்சினைகளால் பாதிப்படையும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். இனசன பந்துக்களுடன் பகை விரோதங்களும் சிலருக்கு ஏற்படும்.

வர்த்தகர்கட்கு வியாபாரத்தில் எதிர்பாராத திருப்பங்கள் எற்படும். வியாபாரம் சுறுசுறுப்புடன் வளரும். பழைய நிலுவைக் கடன்கள் கூட கிடைக்கும். முதலீடுகளின் வருமானமும் திருப்தி தரும்.

உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கப் பொறுப்புக்கள் கூடிக்கொண்டே போகும். அதிகாரிகளைத் திருத்திப்படுத்துவதே இவர்களுக்குப் பெரியசிரமமாக இருக்கும். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இம்மாதமும் பயிர் உற்பத்திச் செலவுகள் கூடிக்கொண்டே போகும். எதிர்பாராதவகையில் இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிரழிவும் ஏற்படும்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் குறைவுறும். தொழிலாளரி மத்தியில் கருத்துவேறுபா


டுகள் அடிக்கடி ஏற்படும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் ஏற்படும்.

மாணவர்களுக்கு கல்வியூக்கம் ஏற்படும். ஆனல் கல்வி அதிகாரிகளின் கெடுபிடிகளும் தொடரும். கணிதவிஞ்ஞானத் துறை மாணவரின் கல்வித் தேர்ச்சி கணிசமானவரை முன்னேற்றம் காணும்.

பெண்களுக்குக் குடும்பப்பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படும். வீட்டில் விவாகாதி சுபநிகழ்ச்சிகள் பெரும்பாலும் தடைதாமதங்களின் அல்லது நெருக்கடிகளின் மத்தியிலேயே இடம்பெறலாம்.

அதிஷ்டநாட்கள்: பெப் 14 15,23,24,28
மார்ச் 4 8பக,9,13பக,14

துரதிஷ்டநாட்கள்; பெப் 16பக,17 18பக,21,22
மார்ச் 1பக,2,3 மு.ப




**கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ம்கால**

இடபராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 10ல் தாம்ரமூர்த்தியாகி வலம்வருகிறார். இவர் மூர்த்திபலம் குறைந்தாலும் தானபலம் பெறுதலின் சுபபலன்களே அதிகரிக்கும். குருபகவானின் சுபகோசாரமும் இவர்களுக்குச் சாதகமாக அமையும். பொதுவாக இவர்களின் வாழ்க்கையில் பலநல்ல சுபதிருப்பங்கள் ஏற்படும். வீட்டில் அல்லது குடும்பத்தில் விவாகாதி சுபசந்தோஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும். பொருள்வருமானமும் கணிசமான அளவில் அதிகரிக்கும். தூரதேசம் போய் அல்லது காணாமல்போய் இருந்தவர்கள்பற்றிய தகவல்கள் கூடக்கிடைக்கும். எனினும் இராசாங்கவிரோதம் - அதிகாரிகளின் கெடுபிடிகளும் இருக்கவே செய்யும்.

குடும்பத்தில் நல்லுறவுவளரும். பந்துசன கொண்டாட்டங்கள் சுபமங்கள சம்பவங்களும் இடம்பெறும். குடும்பப்பெரியவர்களின் அன்பும் ஆசியும் புத்திரர்களின் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை நீங்கி முன்னேற்றம் ஏற்படும். பழையநிலுவைக் கடன்கள் கூடக்கிடைக்கும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளால் அடிக்கடி தொந்தரவுகள் ஏற்படும். பதவிப் பொறுப்புக்கள் கூடிக்கொண்டே போகும். உடன் உத்தியோகத்தர்களின் ஆதரவுகள் இருப்பதால் எதையும் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

விவசாயிகளுக்கு பயிரழிவு தொடரும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் குறையும். ஆனல் அரசமானியம் பசளைமுதலியன கிடைப்பதால் அதிகம் பாதிப்படையமாட்டார்கள்.

தொழிலாளர் மத்தியில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாதானமாகச் சமாளித்துக் கொள்ளுவார்கள். நிரந்தரவேலைகள் கிடையாவிட்டா போதியவருமானத்தைப் பெற்றுக்கொள்ளாம்.

மாணவர் கல்வியூக்கம் அதிகரிக்கும். கணிதவிஞ்ஞான மருத்துவத்துறை மாணவர் விசேட கல்வித்தேர்ச்சி பெறுவர். சிலருக்கு உயர்கல்வி வாய்ப்பு அல்லது புலமைப்பரிசில்கள் கிடைக்கும்.

பெண்களுக்கு மனநிறைவானமாதம். காதல் முயற்சிகள் மனம்போல் கைகூடிவரும். கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகளும் நிறைவுபெறும். பிரயாணங்களில் அவதானத்துடன செயற்படவும்.

அதிஷ்ட.நாட்கள்: பெப் 13,17,18பக,26
மார்ச் 1பக,2,6,7,11,12

துரதிஷ்டநாட்கள்: பெப் 18இர,19,20,23,24
மார்ச் 3பி.ப.4,5மாலை




**மிருகசீரிடம் 2,3, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

மிதுன இராசியில் ஜெனனமானவர்களுக்குச் சூரியபகவான் 9ல் ரஜஸமூர்த்தியாகி வலம்வருகிறார். சூரியன் மூர்த்திபலம் பெறுதலின் பொதுவாக இவர்களுக்கு நன்மைகலந்த தீயபலன்கள் நிகழும். தேகசுகம் சீராக இருக்கும். ஆனல் குடும்ப சுகம் அடிக்கடி பாதிக்கப்படும். குடும்பவருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பாராத திடீர்நெருக்கடிகள் கூடச்சிலருக்கு இடம்பெறவும் கூடும். இடப்பிரிவு - பந்துசனவிரோதம் புத்திரர் தொல்லைகளும் சிலருக்கு ஏற்படலாம். எனினும் அந்நியர்உதவி அந்நியநாட்டுப் பொருள்வரவு அந்நியதேச சஞ்சார பலன்களும் சிலருக்குக் கிடைக்கும்.

குடும்பத்தில் பிணி பீடைகள் அடிக்கடி ஏற்படும். புத்திரர் உதவிகள் கிடையாது. எதிர்பாராத திடீர்ச்செலவுகளால் கடன்பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். வங்கி நிதிவசதிகளிலும் பற்றுக்குறைவுகள் ஏற்படும். பழையமுதலீடுகளிலும் வருமானம் வீழ்ச்சியுறும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் வேலைப் பொறுப்புக்களும் கூடும். உடன் உத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைவு கணிசமான அளவில் முன்னேற்றம் காணும். விவசாயப்பண்ணைகளிலும் வருமானம் அதிகரிக்கும். பசளைமானியம் மருந்து முதலியனவும் கிடைக்கும்.

தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படும். வேலைவாய்ப்புக்களும் போதிய அளவில் கிடைக்கும். நாள்சம்பள ஊழியர்களுக்கும் சீவியத்துக்குப் போதுமான வருமானம் கிடைக்கும்.

மாணவர்கள் கல்வியில் ஆர்வம் குன்றும். கல்விக்குழப்ப நிலையிலும் சுயமுயற்சியுடையவர்கள் தேர்ச்சிபெறுவர். முக்கியமாகச் சட்டத்துறை மாணவர்கள் சிறப்புச்சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு மனவேதனையான சம்பவங்களை எதிர்நோக்க வேண்டிஇருக்கும். கணவன் மனைவி உறவிலும் விரிசல்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. காதல் விவகாரங்கள் பெரும்பாலும் ஏமாற்றத்தைக் கொடுக்கும்.

அதிஷ்டநாட்கள்: பெப் 14,15,18இர.19,27பகல்
மார்ச் 4,8பக,9,13பக,14

துரதிஷ்டநாட்கள்: பெப் 21,22.25பக,26
மார்ச் 5இரவு,6,7,8காலை



## கடகம்

**புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்**

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 8ல் (அட்டமத்தில்) சுவர்ணமூர்த்தியாகிப் பலம் பெறுவது நன்மையாகும். சூரியபகவான் மூர்த்திபலம் பெறுவதும் குருபகவான் திரிகோணத்தில் இருந்து திருஷ்டி செய்வதும் இவர்களுக்குக் கடந்தகாலங்களில் அனுபவித்த கஷ்டநட்டங்களிலிருந்து விடுதலை கிடைக்கும். பொதுவாக உடல்நலம் குடும்பநலம் என்பன சீராக இருக்கும். பொருள்வருமானமும் முன்னேற்றம் பெறும். முன்பு தடைப்பட்டிருந்த காரியங்களில் சாதகமான வெற்றியும்பெறுவர். வீட்டில் விவாக சுப கொண்டாட்டங்களும் நிகழும். மன அமைதியும் கிடைக்கும்.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சீராக இருக்கும். குடும்ப வருமானம் கூடும். முன்பு தடைப்பட்டிருந்த விவாகாதி முயற்சிகளில் காரியசித்தியும் பெறுவர். புத்திரர் உதவி உண்டு.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் அதிகரிக்கும். வங்கி நிதிநிறுவனங்களில் உதவிகள் கிடைக்கும். வியாபாரமும் முன்னேற்றம் காணும். வர்த்தகர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும்

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்ச்சிகள் கூடக் கிடைக்கும். தற்காலிக ஊழியர்கள் பதவியில் நிரந்தரமாக நியமிக்கப்படுவர்.

விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்திச் செலவுகள் இந்தமாதம் அதிகரிக்கும். பயிரழிவுகள் ஏற்பட்டாலும் விளைவுகள் கணிசமான அளவில் கூடுதலால் நட்டம் ஏற்படமாட்டாது.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் சுமாராகக் கிடைக்கும். தொழில் பிணக்குகளும் சமாதானமாகத் தீரும். நாட்கூலி வேலை செய்வோருக்கும் சீவியத்துக்குப் போதுமான வருமானம் கிடைக்கும்

மாணவர் கல்வியில் முன்னேற்றம் பெறுவர். கணிதத்துறை சட்டத்துறை மாணவர்கள் விசேட தேர்ச்சி பெறுவர். சிலருக்கு புலமைப் பரிசில் கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு மனநிறைவான மாதம். காதல் விவகாரம் சாதகமாக முன்னேற்றமடையும். விவாக முயற்சிகள் கைகூடும். குடும்பத்தில் கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் ஆறுதல் தரும்.

அதிஷ்டநாட்கள்: பெப். 13,16பக. 17,18பக. 21
மார்ச். 1பக.2,6 7,11,12

துரதிஷ்டநாட்கள்: பெப். 23,24.27பக.28
மார்ச். 1அதிகாலை.8பக.9




**மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்**

இந்த ராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் 7ல் லோகமூர்த்தியாகிப் பலக் குறைவுடன் வலம் வருவது நன்மைதராது. மேலும் குருபகவான் அட்டமத்தில் கோசார சஞ்சாரம் செய்வதும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். பொதுவாக இவர்களின் உடல் உள நலங்கள் பாதிப்படையும். வருமானமும் வீழ்ச்சியடையும். பல வழிகளிலும் துன்பச் சோதனைகள் ஏற்படும். எந்தக் காரியமும் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக எதிர்பாராத இடைத் திருப்பங்களால் சிக்கல்களில் தத்தளிக்கச் செய்யும். தசா புக்தி அந்தரபலம் பெற்றவர்கள் அதிகம் பாதிப்படைய மாட்டார்கள். மற்றவர்களுக்குத் தெய்வம்தான் துணைசெய்ய வேண்டும்.

குடும்பத்தில் பிணி-பீடைகள் அடிக்கடி ஏற்படும். கணவன் மனைவி பிணக்குகளும் உட்பூசல்களும் இடைக்கிடை ஏற்படும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடையும். நிதி வசதிகளும் குன்றும். முதலீடுகளில் நட்டங்கள் ஏற்படும். ஊழியர்கள் விஷயத்தில் எச்சரிக்கை தேவை.

உத்தியோகத்தர்களுக்குச் சோதனையான காலம். மேலதிகாரிகளின் கெடுபிடிகள் வேதனை தரும். பதவி இழப்பு அல்லது பதவி விலகல் போன்ற சம்பவங்கள் கூடச் சிலருக்கு ஏற்படும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவு எல்லைகடந்து உயரும். அத்துடன் பயிரழிவும் ஏற்படவே செய்யும். விளைவும் குன்றும். கூலியாட்களின் பிரச்சனைகளும் ஏற்படும்.

தொழிலாளர் வேலைவசதிகள் பெருமளவில் குறைவுறும். தொழிலாளர் மத்தியில் பகை-விரோதங்களும் ஏற்படும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் ஏற்படும்.

மாணவர் கல்வித் தடைக்காரணிகளே வலுப்பெறும். ஆசிரியர்-மாணவர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் அவ்வப்போது தோன்றும். கல்விக் குழப்பநிலையிலும் சுயமுயற்சி உள்ளவர்கள் தேர்ச்சி பெறுவர்.

பெண்களுக்கு நாவடக்கத்துக்குச் சோதனைகள் ஏற்படும் காலம். காதலர் விஷயத்தில் முன் எச்சரிக்கை தேவை. அநாவசிய ஆடம்பர ஆசைகளை அடக்குவதால் தப்பிக்கொள்ளுவார்கள்.

அதிஷ்டநாட்கள்: பெப். 14,15,19 20,23,24
மார்ச். 4,8பக.9,13பக.14

துரதிஷ்டநாட்கள்; பெப். 13,25பக,26
மார்ச். 1பக;2,11,12




**உத்தரம் 2. 3. 4, அத்தம், சித்திரை 1, 2 கால்**

கன்னியா இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 6ல் சுவர்ண மூர்த்தியாகிப் பலம் பெறுவது சிறப்பாகும். மேலும் பிரதான கிரகங்களான குருபகவான் சனிபகவான் ஆகியவர்களின் சுப கோசாரசஞ்சாரமும் நிகழுவதால் பல வழிகளிலும் முன்னேற்றமும் ஆறுதலும் கிடைக்கும். குடும்பத்தில் மங்களகரமான சந்தோஷ கொண்டாட்டங்கள் கூட இடம் பெறும். காரியசித்தி-பூமி-வீடு-வாகனவிருத்தி விற்றல் வாங்கல் மூலமான லாபங்கள் குடும்பச் சிறப்பு முதலான சுப பலன்களே அதிகம் நிகழும். ஆனால் தசாபுக்தி அந்தரபெலம் இல்லாதவர்கள் விஷயத்தில் பலன்கள் மட்டுப்படுத்தப்படுவதுடன் நேர் விரோதமாகவும் நிகழும்.

குடும்பத்தில் அந்நியோன்னிய உறவும் சந்தோஷமும் நிகழும். ஆனால் குடும்பகுசுவீனங்கள் இடைக்கிடை ஏற்படவும் செய்யும். குடும்பவருமானம் சிறப்பாக முன்னேறும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் லாபம்கிடைக்கும். வங்கி நிதிவசதிகளும் கிடைக்கும். வியாபாரம் முன்னேற்றம் காணும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்களுக்கு அதிகலாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நன்மதிப்பும் பாராட்டுக்களும் கிடைக்கும் உடன் உத்தியோகத்தர்களின் உதவிகளும் கிடைக்கும். பிரயாணங்களில் விபத்துக்களும் நேரிடலாம்.

விவசாயிகளுக்குச் சாதகமான மாதம். பயிர் விளைவும் அதிகரிக்கும். விவசாயப்பண்ணைகளிலும் வருமானம் கூடும். எதிர்பாராததவகையில் சந்தை வாய்ப்புக் கிடைக்கும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் கிடைக்கும். தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கமும் ஏற்படும். முதலாளிமார் - தொழிலாளர் மத்தியில் கருத்து ஒற்றுமை நிலவும்.

மாணவர் கல்விவளர்ச்சி பெறுவர். ஆசிரியர் மாணவர் நல்லிணக்கம் வளரும். கலைத்துறை சட்டத்துறை மாணவர்கள் சிறப்புச்சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு மனநிறைவான மாதம். ஆனால் துணைவர்கள் பணி பீடைகளினால் துன்பப்பட இவர்களுக்கும் சோதனைகள் ஏற்படும். விவாக முயற்சிகள் கைகூடிவர வாய்ப்பான காலம்.

அதிஷ்டநாட்கள்: பெப் 13,17,21,22,26
மார்ச் 5இரவு,6,7,11,12

துரதிஷ்டநாட்கள்: பெப் 14,15,27பக,28
மார்ச் 4,5மாலை,13பக,14




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3,

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் இம்மாதம் 5ல் தாம்பரமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது அதிகம் நன்மைதராது. பொதுவாக இவர்களின் உடல் உள நலங்கள் இடைக்கிடை பாதிக்கப்படவே செய்யும். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் பிணிபீடைகள் வாக்கு விரோத சம்பவங்கள் எதிர்பாராத திடீர்நெருக்கடிகள் முதலானவை ஏற்படும். அவசரபுத்தி அல்லது ஆத்திரபுத்திகளால் நல்ல நண்பர்களுடன் அநாவசியமாக விரோதப்படவேண்டி வரும். சிலருக்கு காராகிரகவாசம் கூட ஏற்படலாம். தசா புத்தி அந்தரபலம் உள்ளவர்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டார்கள். மற்றவர்களுக்குத் தெய்வ பக்திதான் ஆறுதல் தரும்.

குடும்பத்தில் பிணக்குகள் சச்சரவுகள் பிணி பீடை முதலியன அடிக்கடி ஏற்படும். குடும்பச் செலவு வரம்புமீறி ஏறும். குடும்ப வருமானம் பெருமளவில் வீழ்ச்சியடையும். நிதானமும் முன் எச்சரிக்கையும் மிக அவசியம்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடையும். முதலீடுகளின் வருமானம் குறையும். நிதி நெருக்கடிகளும் ஏற்படும். நிலுவைக் கடன்களும் அறவிடமுடியாத சூழ்நிலை ஏற்படும். முதலீடுகளை தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு ஏறிக்கொண்டேபோகும். சக உத்தியோகத்தர்களுடன் அநாவசியமாகப் பகைக்கவும்கூடும். பதவி மாற்றம் அல்லது பதவி இறக்கம் வேலை நீக்கம் முதலான சம்பவங்கள் ஏற்பட்டாலுமாச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிருற்பத்திச் செலவு கூடிக்கொண்டே போகும். இயற்கை செயற்கையேதுக்களால் பயிரழிவும் ஏற்படும். விளைவும் குறையும், கடன்பழு ஏறும். வாழ்க்கைத்தரம் குன்றும் விவசாயப் பண்ணைகளில் நட்டம் ஏற்படும்.


தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் குறையும். தொழிலாளர் முதலாளிகள் பிணக்குகள் வலுவடையும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் ஏற்படும். வேலைத்தலங்களில் விபத்து அவமிருத்துக்களையும்கூட இவர்கள் சமாளிக்க வேண்டியிருக்கும்.

மாணவர் கல்வித்தடைக் காரணிகளே அதிகரிக்கும். ஆசிரியர் மாணவர் கருத்துமாறுபாடுகள் வளரும். மாணவர் மத்தியில் விரக்தியும் வெறுப்பும் வளரும். சுயமுயற்சி உடையவர்கள் ஓரளவு தேர்ச்சிபெறுவர்.

பெண்களுக்கு சோதனையான காலம். விவாக முயற்சிகள் முடிவில்லாமல் நீளும். குடும்பப்பெண்களுக்குக் குடும்பப் பொறுப்பு அதிகரிக்கும். வினோத நோய்களும் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: பெப். 14,15,19 20,23,24,
மார்ச் 8,9,13,14.

துரதிஷ்ட நாட்கள்: பெப். 16 17.18.
மார்ச் 1,2,6,7.



# விருச்சிகம்

விசாகம் 4, அனுஷம், கேட்டை

விருச்சிகராசியில் ஜெனனமானவர்களுக்கு இம் மாதம் சூரியபகவான் 4ல் ரஜதமூர்த்தியாகி வலம் வருவது நன்மையாகும். குருவுடைய திரிகோண பார்வையும் இவர்களுக்கு இருப்பதும் நன்மையே. கடந்த காலங்களில் நிகழ்ந்த கஷ்டநட்டங்களி லிருந்து விடுபட்டு முன்னேற்றப்பெற வாய்ப்பு கள் ஏற்படும். தேகசுகம் சுமாராக இருக்கும். வருமானம் குறைந்தாலும் பெரியவர்களின் உத விகள் கிடைக்கும். வேலைவாய்ப்புக்களும் கிடைக் கும். வீட்டில் சுபசந்தோஷ கொண்டாட்டங்கள் கூடநிகழும். நண்பர்கள் விஷயத்தில் அவதானம் தேவை.

குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் மனைவி நல்லுறவு வளரும். குடும்பவருமானம் திருப்திதரும். ஏழரைச் சனீஸ்வரனின் காலமாத லின் சோரசத்துரு பயமும் சிலருக்கு ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளின் வருமானம் இம்மாதமும் குறையும். நிதிநெருக்கடிகளும் ஏற் படும். வியாபாரம் மந்தநிலை அடையும், கூடிய வரை முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். வேலைப்பழுவும் குறையும். சக ஊழி யர்களின் உதவிகள் கிடைக்கும்.

விவசாயிகட்கு பயிரழிவு குறைந்தாலும் உற் பத்திச்செலவுகள் கூடவே செய்யும். கூலியாட்க ளும் பிரச்சினைகள் கொடுப்பர். ஆனால் நல்ல சந் தைவாய்ப்புக் கிடைக்கும்.

தொழிலாளர் வேலைவசதிகள் ஓரளவு பெறு வர். தினச்சம்பளத் தொழிலாளரின் நாளாந்த சீவியம் ஓரளவு கஷ்டமாகவே இருக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் வருமானம் வீழ்ச்சியுறும்.

மாணவர்கள் கல்வித்தடைகள் பெரும்பாலும் நீங்கத் தொடங்கும். சட்டத்துறை மாணவர்கள் விசேடசித்தி பெறுவர். புலமைப பரிசில்கள் வெளி நாட்டுக் கல்விவாய்ப்புக்கள் கூடச் சிலருக்குக் கிடைக்கும்;

பெண்களுக்கு எண்ணங்கள் நிறைவுபெறச் சாதகமான காலம். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்பும் அன்பும் ஆறுதல் தரும். விவாகாதி முயற்சிகளும் காரியசித்தியடை யும்.

அதிஷ்ட நாட்கள்: பெப். 13,17,21,22,26.
மார்ச் 1,2,11,12.

துரதிஷ்ட நாட்கள்: பெப். 18,19,20.
மார்ச் 3,4,5,8,9;



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 3ல் லோகமூர்த்தியாகிப் பலம்குறைந்து வலம்வருவது நன்மைதராது. மற் றும் பிரதான கிரகங்களான சனீஸ்வரன் – குரு ஆகியவர்களின் துர்க்கோசார சஞ்சாரமும் நிகழு வதும் கவனிக்கப்படவேண்டும். பொதுவாக இவர்களின் உடல்நலம் அடிக்கடி பாதிக்கப்பட லாம். பொருள் வருமானமும் குறைவதுடன் செலவுகளும் அதிகரிக்கும். வீட்டில் துக்கசம்பவங் கூட இடம்பெற்றாலும் ஆச்சரியமில்லை. தசாபுக்தி அந்தர பெலமுடையவர்கள் அதிகம் பாதிக்கப்பட மாட்டார்கள், மற்றவர்களுக்கு தெய்வபக்திவழி பாடுகள் தான் ஆறுதல் தரமுடியும்.

குடும்பத்தின் செலவுகள் கட்டுக்கடங்காமல் ஏறும். குடும்பசச்சரவுகள் - ஏன் பிரிந்துவாழ வேண்டிய நிர்ப்பந்தங்கள் கூடஏற்படும். புத்திரர் சகோதரர் வழிகளால் உதவிகள் கிடையாது.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளின் வருமானம் வீழ்ச்சியடையும். வாடிக்கையாளரின் வருகையும் குறையும். நிதிநெருக்கடிகளால் கடன்நிலுவைகூட அறவிடமுடியாத அவலநிலை ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடு பிடிகள் தொல்லைதரும். சிலருக்குக் கஷ்டப்பிர தேச இடமாற்றம்கூட இடம்பெறலாம். உடன் ஊழியர்களுடன் கருத்துமோதல்களைத் தவிர்த்தல் நல்லது.

விவசாயிகளுக்கு இந்தமாதமும் பயிரழிவு தொடரும். விளைவும் குறைவுறும். விவசாயப்

பண்ணைகளிலும் வேலையாட்கள் பிரச்சனை ஏற்படும். வாழ்க்கைத்தரம் குறைவதுடன் கடன் பயமும் இவர்களுக்கு ஏற்படும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் குறைவுறும். தொழில் பிணக்குகளும் வேலைநிறுத்தம் முதலியனவும் இவர்களுக்குப் பிரச்சினைகளைக் கொடுக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டமேற்படும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். மாணவர் மத்தியில் விரக்தி ஏமாற்றம் முதலான குணங்கள் தோன்றும். பரீட்சை முடிவுகளும் திருப்திகரமாட்டாது. ஆசிரியர் மாணவர் கருத்து வேற்றுமையும் வலுவடையும்.

பெண்களுக்குப் பலப்பல பிரச்சனைகள் தோன்றும். உணர்ச்சிவசப்படுவதால் இவர்கள் ஏமாற்றப்படுதலுடன் அவமானப்படவேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலைகளைக்கூடியவரை தவிர்த்துக்கொள்ளுமாறு நவநாயகர்கள் எச்சரிக்கின்றனர்.

அதிஷ்ட நாட்கள்: பெப். 14,15,19,20,23,24,28.
மார்ச் 4,5,13,14.

துரதிஷ்ட நாட்கள்: பெப். 13,21,22.
மார்ச் 5,6,7,11,12.




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசியில் செனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் உல் தாம்பரமூர்த்தியாகி வலம்வருகின்றார். சூரியன் பலம் குறைவதும் குருபகவானின் குரு கோசாரமும் இவர்களுக்கு நன்மைதராது. பொதுவாக இவர்களின் தேகாரோக்கியம் பாதிக்கப்படவே செய்யும். வீண் அலைச்சல் மூலம் அற்பபலன்கள் வீண் செலவுகள் அந்நியதேச சஞ்சாரம், பொருள் நட்டம், முதலான கெட்ட பலன்களே அதிகம் நிகழும். நாவடக்கத்துடன் இருப்பதால் சொதுன்பங்களை குறைய வாய்ப்புண்டு. தசாபுத்தி அந்தரபலமுள்ளவர்கட்கு அதிக துன்பம் ஏற்படமாட்டாது. மற்றவர்கள் தெய்வபக்தியால் ஆறுதல் பெறமுடியும்.

குடும்பத்தில் பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்பச் செலவுகள் எதிர்பாராத வகையில் கூடும். இனசனபந்துக்களுடன் பகைவிரோதங்கள் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் எதிர்பார்த்த லாபம் கிடையாவிட்டாலும் நட்டம் வராது. மூசலீடுகளில் வருமானம் குறைவுறும். நிதிநெருக்கடிகளும் ஏற்படும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் துன்பம் தரும். சிலர் பதவியிலகினாலும் ஆச்சரியமில்லை. வேலைப்பழுவும் அநாவசியச் செலவுகளும் தாங்கமுடியாது தித்தளிக்கச் செய்யும்.

விவசாயிகளுக்குப் பயிர்விளைவு கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்படும். விவசாயப்பண்ணைகளிலும். அநாவசியச் செலவுகளால் நட்டம் ஏற்படும். பொதுவாக இவர்களுக்கு கைக்கெட்டியது வாய்க்கெட்டாது.

தொழிலாளருக்குள் பிணக்குகள் அவ்வப்போது ஏற்பட்டாலும் வேலைவசதிகளும் கிடைக்கிடைக்கும். நாளாந்த சீவியத்துக்கு கஷ்டம் இல்லாது வருமானம் கிடைக்கும்.

மாணவர்களின் கல்வியூக்கம் வளரும். கணித விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்புத்தேர்ச்சியும் பெறுவர். அவ்வப்போது கல்விக் குழப்பநிலையும் ஏற்படும்.

பெண்களுக்கும் பொறுமைக்குச் சோதனையான மாதம். காதல் முயற்சிகள் தோல்வியையும் ஏன் அவமானத்தையும் தழுவினாலும் ஆச்சரியமில்லை. துணைவர்களுன் ஏச்சும் பேச்சும் அடிக்கடி வீட்டு அமைதியைக் குறையச்செய்யும்.

அதிஷ்ட நாட்கள்: பெப். 16,17,18,21,22,26.
மார்ச் 1,2,6,7.

துரதிஷ்ட நாட்கள்: பெப். 14,15 23,24.
மார்ச் 8,9,13,14.




அவிட்டம் 3, 4 சதயம் பூரட்டாதி 1, 2, 3-ம் கால்

கும்பராசியில் செனனமானவர்களுக்குச் சூரியபகவான் சென்மத்தில் சுவர்ண மூர்த்தியாகிப் பலம் பெறுவது நன்மையாகும். வாக்கில் குருபகவானும் பலம் பெறுவதும் நன்மையே. பொது

வாக இவர்களின் தேகாரோக்கியம் சிறப்பாக இருக்கும். பொருள் வருமானமும் கணிசமான வரை கூடும். பெரியோர் உதவி, அரசாங்க உதவிகள் கிடைக்கும், முன்பு தடைப்பட்டிருந்த காரியங்களில் வெற்றியும் பெறுவர். வீட்டில் மகிழ்ச்சி நிலவும். மங்கள விழாக்களும் இடம் பெற வாய்ப்புக்கள் கிடைக்கும். விற்றல் வாங்கல் மூலம் லாபம் பெறுவர்.

குடும்பத்தில் நல்லுறவு மகிழ்ச்சி தரும். குடும்ப வருமானம் முன்னேற்றம் காணும். குரு முதலிய குடும்பப் பெரியவர்களின் ஆசியும் அன்பும் கிடைக்கும். புத்திரர் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வருமானம் குறைந்தாலும் நட்டம் வாராது. வங்கி உதவிகள் கிடைக்கும். வாடிக்கையாளரின் வருகை மகிழ்ச்சிதரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். பதவிச்சிறப்பு அல்லது பதவியுயர்ச்சியும் சிலருக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர் அழிவுகள் ஏற்பட்டாலும் நட்டம் ஏற்படாது. விவசாயப் பண்ணைகளிலும் நல்ல விளைச்சல் ஏற்படும்.


தொழிலாளருக்கு வேலைவசதிகள் திருப்தியானவரை கிடைக்கும், தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படும், தொழில் ஒப்பந்த வேலைகளிலும் ஓரளவு லாபம் கிடைக்கும்.

மாணவர் கல்வி வளர்ச்சி மகிழ்ச்சி தரும். சட்டத்துறை கணித விஞ்ஞானத்துறை மாணவர் சிறப்புச் சித்தி பெறுவர்.

பெண்களுக்கு எண்ணங்கள் பெரும்பாலும் நிறைவுபெறும். குடும்பப் பெண்களுக்குத் துணைவர்களின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சிதரும்.

அதிஷ்டநாட்கள்: பெப். 19,20,23,24,27பக,28
மார்ச். 4,8பக9.

துரதிஷ்டநாட்கள்: பெப். 13,16பக.17,18பக.
மார்ச். 11,12,13காலை



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 12-ல் விரையத்தில் ரஜஸமூர்த்தியாகி வலம் வருகிறார். சூரியன் மூர்த்திபலம் பெறுவது நன்மை தரும். குருபகவான் ஜென்மத்தில் கோசாரபலம் குறைந்தாலும் ஆட்சிராசியில் திக்குப்பெலமும் அம்சயோகமும் பெறுவதும் நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல் நலம் சீராக இருக்கும். நல்ல வருமானத்துடன் நற் செலவுகளும் ஏற்படும். சிலருக்கு தூரதேச பிரயாணங்களும் கிடைக்கும். முயற்சி பலிதம் தொழிற் சிறப்புக்களும் கிடைக்கும். புண்ணிய யாத்திரைப் பலன்களும் சிலருக்கும் கிடைக்கும். குடும்ப சுகவீனம் இவர்களில் சிலருக்குப் பெரிய பிரச்சினைகளையும் தோற்றுவிக்கவும் கூடும்.

குடும்பத்தில் அடிக்கடி சுகவீனங்கள் ஏற்படும். குடும்பப் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். புத்திரர் உதவிகள் கிடையாது, குடும்ப வருமானம் குடும்பச் செலவுகளிலும் குறைவாகவே இருக்கும். கடன்பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடையும். வாடிக்கையாளரின் வருகையும் குன்றும். நிலுவைக் கடன்களை வசூலிக்க முடியாத சூழ்நிலைகள் ஏற்படும், நிதி நெருக்கடியும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். சக உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். ஆனால் பதவிப் பொறுப்பும் கூடி செலவும் அதிகரிக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தியில் சிரமங்கள் தொடரும். ஆனால் போதிய விளைச்சல்கள் கிடைப்பதால் நட்டம் ஏற்படாது. பண்ணைகளிலும் விளைச்சல் அதிகரிக்கும்.

தொழிலாளிகளுக்குக் கணிசமான அளவு வேலை வசதிகள் கிடைக்கும். சம்பளத்திலும் செலவுகள் கூடுவதால் இவர்களின் வாழ்க்கைத்தரம் குன்றும். ஒப்பந்த வேலைகளில் லாபம் கிடையாது

மாணவர்களின் கல்வித்தேர்ச்சி வளர்ச்சியடையும். மருத்துவம் பொறியியல்துறைக் கல்வி பயில்வோர் சிறப்படைவர். சிலருக்கு உயர்கல்வி வாய்ப்பும் வெளிநாட்டுக் கல்விவாய்ப்பும்கூடக் கிடைக்கும்.

பெண்களுக்கு துணைவர்மாருடன் அடிக்கடி கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும். சிலசமயங்களில் பிரிந்து வாழவேண்டியும் வரலாம். விவாக முயற்சிகளில் சிரமங்கள் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: பெப். 13,21,22,26
மார்ச் 1,2,6,7 11,12.

துரதிஷ்ட நாட்கள்: பெப். 14 15,19,20,28.
மார்ச் 13,14.

# சந்திரனின் மகத்துவமும் மனிதனும்

கா. சின்னையா, சங்குவாரி, கம்பளை.

2,39000 மைல்களுக்கு அப்பால் சந்திரன் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மனிதன் அங்கு சென்று மண்ணைத் தோண்டிக்கொண்டு திரும்பி விட்டான் என்றதும், உலகிலுள்ள மக்கள் அனைவரும் அவர்களை பாராட்டுகின்றனர். ஏனெனில் சந்திரனைப் பற்றி மக்கள் புராண இதிகாசத்தில் படித்ததோடு இருந்தனரேயன்றிப் பார்த்ததில்லை. எனினும் டெலிவிஷன் கருவிமூலம் மக்கள் சந்திரனைப் பார்க்கமுடிந்தது. அதனால் இது ஒரு அரிய சாதனைதான் என்று கூறிக்கொண்டு மேலும் தொடர்வோம்.

சந்திரனுக்கு மனிதன் சென்று திரும்பிவிட்டான் என்றதும் மக்கள் அனைவருக்கும் (நாஸ்திகனுக்கு) ஏற்படும் அதிருப்தி முதலில் ஜோதிடத்தில் தான் - அதாவது நவக்கிரகங்களில் ஒன்றாகிய சந்திரனுக்கு மனிதன் சென்று வந்துவிட்டான்; இன்னும் சந்திரன் யோகாதிபதியாகி உச்சத்திலிருப்பதால் உமக்கு நல்ல இராஜயோகம் உண்டு என்று ஜோதிடம் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்க நாங்கள் தயாரில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கலாம்.

நம்முன்னோர்கள் ஆத்ம பலத்தால் எல்லாக் கிரகங்களையும் கண்டு ஆராய்ந்து கிரககணிதங்களை எழுதிவைத்தனர். கணிதப்படி கிரகணம் இன்ன மாதம் இன்னகிழமை இன்னதேதியில் இத்தனை நாழிகை முதல் இன்னநாழிகை வரை சூரியன் சந்திரன் கிரகணம் பிடிக்கும் என்றெல்லாம் கணிதமுறையில் ஆதாரம் காட்டியிருப்பது இன்று வரை சரியாக நடந்துவருவதை நாம் கண்கூடாகப் பார்த்து சாஸ்திரத்தை நம்பிவருகின்றோம். இவ்வாறு நம்முன்னோர் சாதனை இருக்க, இன்று மனிதன் சந்திரனுக்கு மனிதன் சென்றான் என்றால் அவ்வளவாகப் பெருமைபடத்தக்க செய்தி அல்ல. மேலும் நம் சாஸ்திரத்தில் கூறப்படும் தூரத்தையே விஞ்ஞானியும் கூறுவதால் - இதனால் ஜோதிட சாஸ்திரத்தின் மீது நம்பிக்கை அதிகம் ஆகும் என்றுதான் கூறலாம்.

அடுத்து நம்ஜோதிட சாஸ்திரத்தில் 12ராசியில் 27 நக்ஷத்திரம் உள்ளது. இதைச் சந்திரன் ஒருமுறை சுற்றிவர 27½ நாள் ஆகும் என்று கூறப்படுகின்றது. இதைத்தான் இன்றைய சந்திரமண்டல யாத்திரையாலும் தெளிவுபடுத்தியுள்ளனர். மேலும் சந்திரன் ஜலதத்துவமுடையது. அதன் ஆட்சி ராசியாகிய கடகராசி ஜலராசி என நாம் கூறுகின்றோம். இதைத்தான் சந்திரனுக்குச் சென்ற விஞ்ஞானிகளும் கூறியிருக்கின்றனர். சந்திரன் பெண்கிரகம் என்று கூறுகின்றோம். ஏனென்றால் கணவன் எவ்வழியோ அவ்வழியே மனிதன் செல்வதுபோல் பூமிசெல்லும் வழியே சந்திரனும் செல்கின்றது. மேலும் ஆண்களைவிடப் பெண்கள் வலு குறைந்தவர்கள் தாம் என்பது தெரியும். அதுபோல் பூமியைவிட சந்திரனின் சக்திகுறைவு என்பது இன்றைய சந்திரமண்டல யாத்திரை மூலம் நன்கு விளங்குவதாகும். இதனால்தான் சந்திரன் பூமியைப் பார்த்துக்கொண்டே சுற்றுகின்றது என்று சொல்லப்படுகிறது.

தவிர இன்று அனுபவமிக்க ரஷ்ய மருத்துவர்கள் அமாவாசையன்று அறுவைசிகிச்சை செய்வதை நிறுத்தியுள்ளனராம். காரணம் அன்றைக்கு செய்யும் அறுவைசிகிச்சை (Operation) அதிகம் வெற்றி பெறுவதில்லை என்பதால் பொதுவாக அமாவாசை பாரமானநாள். ஆதலால் நோயாளியின் உடல்நிலை அல்லது உயிர் நிலையைப்பற்றிக் கூறும்போது அமாவாசை பிரதமை போகட்டும் பார்ப்போம் என்றுதான் கூறுகின்றோம். இதிலிருந்து அமாவாசைதினம் தீதான அணுக்கதிர்கள் நம்உடலில் சேர்கின்றது என்று நம்பலாம்தானே! எனவேதான் அமாவாசை விரதம் அனுஷ்டிக்கச் சொல்லப்படுகிறது. இப்படிச் சந்திரனைப்பற்றி விஞ்ஞானிகள் தரும் ஆதாரங்களைப் பார்த்தால் ஜோதிட சாத்திரத்தில் சந்திரனைப்பற்றி என்னென்ன கூறுகின்றதோ அதையே கூறுகின்றனர் என்பதாகிறது. ஆகையால் சந்திரனுக்கு மனிதன் சென்றுவிட்டதால் ஜோதிடம் பொய்யாகிவிடாது. ஜோதிடத்தில் அதிக நம்பிக்கைதான் ஏற்படும்.

இன்னும் மேல்நாட்டு இலக்கியங்களை உற்று நோக்கினால் வளர்பிறையிலும் தேய்பிறையிலும் இன்ன இன்ன காரியங்கள் தான் செய்யவேண்டும் என பிரித்திருக்கின்றனர்; மில்டன் அவர்களும் சேக்ஸ்பியர் அவர்களும் தங்களுடைய இலக்கியங்களில் சந்திரனுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். முஸ்லிம் புண்ணிய ஸ்த

லமான மெக்கா மெதினு போன்ற இடங்களில் நபிகள் விழாவுக்காக பிறைகளைக் கணக்கிட்டு சந்திரகிரகத்திற்கு விசேஷ வழிபாடு செய்கின்றனர். மேற்கத்திய நாடுகளின் விழாக்களில் பெரும்பான்மையான மதங்கள் சந்திரனுக்குத் தனி மரியாதை செலுத்தி வருகின்றது என்று சொல்லப்படுகிறது.

முஸ்லிம் மக்கள் சந்திரனை தங்கள் மதச்சடங்குகட்கு முக்கியமாகக் கொண்டதற்கு இன்று பல காரணங்களைச் சொல்லுகின்றனர். அதில் சந்திரன் பிறைதொட்டு மாதங்கள் வகுத்தது முதன்மையாகக் கருதப்படுகிறது. விரதங்கட்கு (நோன்பு) சந்திரன் எவ்வளவு முக்கியமானவன் என்பது முஸ்லிம் மக்கட்கே நன்குதெரியும். ரம்ஜான் அன்றும் கொடிவிழா அன்றும் சந்திரனுக்குத் தனி மரியாதை செலுத்தப்படுகின்றன. அவர்களுடைய கொடிகளில் சந்திரனைப் பொறித்திருப்பதே முக்கியமானது. முஸ்லிம் சமயமானது உலகத்திலேயே சிறந்த சமயமாக இருப்பதற்கு முதல் காரணம் அவர்கள் சந்திரனை தங்கள் மதக்கோட்பாடுகட்கு கொண்டதே மற்ற சமயங்களைவிட ஹிந்து மதத்திற்கு அடுத்தாற்போல் சந்திரனைப் போற்றும்மதம் முஸ்லிம் மதமாகும் என்பதை யாவருக்கும் தெரிந்ததே.

இனி ஜோதிட சாஸ்திரத்தினுல் சந்திரனின் முக்கியத்துவத்தையும் ஒரு சிறிது ஆராய்வோம். சந்திரனைத் தினத்தூதன், இரவோன், சோமன் மதி, பிறை, திங்கள் வெண்ணிலா, அம்புலி, நாளரசன் என்றெல்லாம் அழைப்பர். ராகு கேதுக்களின் பலனை ஆராய்வதுபோல் சந்திரனின் பலனை வெகுநுன்னிப்பாக ஆராய்ந்தறிவர் ஜோதிடர்கள். சனியைப்போன்ற பெரியகிரகங்கள் இருந்தும் 2½ நாளில் ஒரு வீட்டிற்குப் போகும் சந்திரனைவைத்து ராசி கணித்திருப்பதே சாஸ்திரத்தில் ஒரு ரகசியமாகும். சந்திரனைவைத்து கெற்பச்செல் எடுக்கிரேும். சந்திரனுக்குள்ள முக்கியத்துவம் மற்ற கிரகங்கட்கு இல்லாததாலேயே சந்திரனை மட்டும் வைத்து ஆராய வேண்டியதாயிற்று. எனவே சந்திரன் பலன் கொடுக்கும்விதமே மிக அற்புதமானது என நிரூபிக்கின்றனர்.

வளர்பிறை காலத்தில் தான் ஒரு நல்ல காரியத்தைச் செய்யத் தொடங்குவார்கள். தேய்பிறை காலத்தில் அதுவும் பஞ்சமித்திதிக்கு மேல் தொடங்கமாட்டார்கள். சந்திரபலன் தாராபலன் முதலியவற்றைப் பார்ப்பதும் சுபத்தைக்கருதியேயாம்.

நிலா வெளிச்சத்தின் சக்தியானது மரம் செடி கொடிகளிலும் கூட பரவி மாறுதல்களை உண்டு பண்ணுகிறது. இதற்குச் சான்ருக நிலவு வெளிச்சம் இருக்கிறகாலத்தில் தூண்முதலியவை கட்காக மரங்களை வெட்டினுல் அவைகள் விரைவில் புழுத்துக் கொட்டிவிடும் என்று சொல்லப்படுகிறது. அமாவாசைக்குமுன் இருட்டாயிருக்கிற ஐந்து நாட்களிலும் மரம்வெட்டினுல் அவை கெடாமல் வெகுநாள் வரையில் பயன்தருமாம்.

மருந்து வகைக்குரிய மூலிகைகளையெல்லாம் வளர்பிறையில் பிடுங்கினுல் தான் பலிக்கும் என்பது வைத்தியநியதி. தேய்பிறை காலத்தில் மருந்து சாப்பிட்டால் வியாதி விரைவில் குணமாகும். இவ்வாறு சந்திரனுடைய சக்தியானது மரஞ்செடிகொடிகளில் பரவுவதுபோல் தான் மக்கள் உடம்பிலும் புகுந்து அதிசயமான செயல்களை உண்டுபண்ணுகிறது. இன்னும் அமாவாசை, பௌர்ணமி, ஏகாதசி பாட்டிமை முதலியநாட்களில் சந்திரனுடைய சக்தியினுல் உடம்பில் சூடும் குளிர்ச்சியும் மாறுபடுகின்றன. இதனுல் செரிக்கும் வலிமை மாறுபடுகின்றன. இதுபற்றி மேற்படி நாட்களில் ஒருவேளை உணவுமாத்திரம் உண்டு விரதமிருப்பார்கள். மேற்படி நாட்களில் நோயாளிகளுக்கு நோய் அதிகமாவதையும் காணக்கூடியதே.

இதுபோல சந்திரகிரகண காலத்தில் மின் காந்தக் கருவிகள் வேலைசெய்வது பாதிக்கப்படுவதும் நரம்புகளும் மனமும் பாதிக்கப்படுவதும் மூளைக்கோளாறு ஏற்படுவதற்கும் சந்திரனுக்கும் தொடர்பு இருப்பதை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உறுதியாகச் சொல்கிருர்கள். மழைபெய்வதற்கும் சந்திரகலை மாற்றத்திற்கும் தொடர்பு உள்ளதென்றும் கூறுகிருர்கள்.

சந்திரனுக்கும் பெண்கள் உடம்பிற்கும் தான் அதிகமான பொருத்தம் இருக்கிறது. சந்திரனும் அமாவாசை முதல் 16 நாட்களில் வளர்ந்து பூரணமடைகிறது. பூத்தநீராடிய நான்காவது நாள் முதல் 12 நாட்கள்வரை கருத்தரிக்கும் காலமாகும். எனக் கணக்கிட்டிருக்கின்றனர். இராசி மண்டலத்தை ஒருமுறை சுற்றிவரச் சந்திரனுக்கு 28 நாட்கள் பிடிக்கின்றன. இந்நாட்களே பெண்களின் மாதவிலக்கின் காலவட்டமாகும். என்பதாம்.

(23ம் பக்கம் பார்க்க)

# எண் சோதிடமும் அதன் உண்மைகளும்

## 3. அடிப்படை எண்கள்

1 முதல் 9 வரை எண்கள்தான் அடிப்படை எண்கள். அவை மூலதாரமானவை. அதனுல்தான் மூலஎண்கள் எனப்படுகின்றன. இவற்றின் மீது தான் கணிதம் மட்டுமல்ல உலகின் பலசக்திகள் தங்கியிருக்கின்றன.

சூன்னம் அல்லது சைபர் எப்போதும் அந்தம் அல்லது முடிவற்றதைக் குறிக்கும். அடிப்படை எண்களுடன் சைபர் சேரும்போது அதன் சக்தி கூடிவிடுகின்றது.

அடிப்படை எண்களில் ஒன்பது எண்ணிற்குப் பின்வரும் எண்கள்யாவும் திரும்பவும் முதலிலிருந்து ஆரம்பமாகின்றன. பத்துஎண்ணும் எண்ணில் ஒன்றின் பக்கத்தில் உள்ள சூன்னம் வரிசைக் கிரமத்தில் திருப்புமுனையாக அமைகின்றது. ஆகவே 10 என்பது ஒன்று என்று திரும்பிவிடுகின்றது. 11 என்னும் எண்ணிலுள்ள 1+1 என்று கூட்டப்பட 2 ஆகிவிடுகின்றது.

எண் 10 சில சிறப்புக்களைக் கொண்டது. அடிப்படை எண் வரிசையில் எண் 9ற்கு அடுத்து திருப்பு முனையாகவும் புதிய வரிசைக்கு ஆரம்பமாகவும் அமைந்துவிட்டது. மற்றும் எண்கள் 20,30,40 யாவும் திருப்புமுனையாக அமையலாம்; ஆனுல் புதியவரிசைக்கு ஆரம்பமாக அமையவில்லை இக்காரணத்தினுல் தான் எண் 10க்கு (சூன்னம் சேர்ந்த) எண்களில் தனிச்சிறப்புண்டு.

மனிதவாழ்க்கையில் திருமணம் ஒரு திருப்பு முனையாகவும் ஒரு புதிய வாழ்க்கைக்கு ஆரம்பமாயும் அமைகின்றது. இதனுல் எண்களில் இவைகளை ஏற்படுத்தும் எண் 10 திருமணத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொள்கின்றது. திருமணத்தினுல் ஆசைப்பெண்ணும் சட்டபூர்வமாக உறவாடுவது போல் எண் 10ம் உரிமையோடு சம்பந்தப்படுகின்றது. எண் 10ல் ஒன்று ஆண்மையாகுல் சூன்னம் பெண்மையாகும். திருமணத்தில் இவை கலக்கின்றன. எனவே ஆண் பெண் இருபாலாரின் அடிப்படை ஆதிக்கஎண்களின் கூட்டுத்தொகை பத்தானுல் திருமணம் நன்குஅமையும்.

உதாரணத்திற்கு ஆணின் எண்4 எனில் பெண்ணின் எண்6 ஆக அமையும்போது இவைகளின் கூட்டுத்தொகை 10 ஆகும், இதனுல் இவர்களுக்கிடையே ஏற்படும் திருமணப் பொருத்தம் நன்கு அமைவதாகக் கருதல்வேண்டும். இங்குஎண் 4ற்கு நிரப்பு எண்ணுக 6 அமைகின்றது. இவைகளைப் பற்றிய விபரங்களை ''எண்களும் திருமணப் பொருத்தங்களும்'' எனும் பகுதியில் (வேருெரு கட்டத்தில்) கவனிப்போம்;

சூரியனை 1ஆல் குறிக்கிறுேம். ஒருகுறி தனித்துவத்தைக் காட்டுகின்றது. இக்குறி செங்குத்து நிலையில் நிற்பதினுல் அது உடல் வலிமையையும் சக்தியையும் உறுதியையும் காட்டுகின்றது. எனவே எண் 1 ஆதிக்கத்தில் உள்ளவர்களிடம் மேற்கூறிய குணதிசயங்களை எதிர்பார்க்கலாம்.

'பவானி' — பருத்தித்துறை

இதேபோல் சந்திரனை எண் 2 ஆல் குறிக்கின்றுேம், இதில் ஒரு சுழி தலையாகவும் இருகுறிகள் உடலாகவும் காணப்படுகின்றன. இதனுல்தான் என்னவோ அதன் உடல் ஒளிவீசிப் பிரகாசிப்பதற்கு சூரியனில் முழுவதும் தங்கியிருக்கின்றது? எந்த எண்களின் குறியீடுகளில் குறிகள் அதிகம் காணப்படுகின்றனவோ அவையாவும் வலிமையாக சூரியனின் ஆதிக்கத்தில் இருப்பதாகக் கருதலாம். மற்றும் எண்களைவிட இவைகளில் சூரியனின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படும். சந்திரன் சிந்தனை, எண்ணங்கள் யாவையும் ஆளுபவன் சிந்தனை, எண்ணங்கள், யாவும் சிரசுடன் சம்மந்தப்பட்டவை. அதனுல்தான் இவ் இலக்கத்தில் சுழியாகிய தலை காணப்படுகின்றது. எனவே சந்திரனின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் பொதுவாக மூளைவளம் நிறைந்தவர்கள். சந்திரன் ஸ்திரமற்றது. வளர்வதும்

தேய்வதும் அதன் சுபாவமாகும். அதனால்தான் எண் 2இன் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் உறுதியற்ற மனநிலையை உடையவர்கள்.

முன்பு 1,4,7 யாவும் ஒரேகுடும்பம் என்று கூறியிருந்தோம். சூரியன் இல்லையேல் ராகு கேதுக்கள் இல்லை. சூரியனைக் குறிக்கும் இலக்கத்தில் ஒருகுறிதான் காணப்படுகிறது, இராகுவைக் குறிக்கும் இலக்கத்தில் (4) மூன்று குறிகளும், கேதுவைக் குறிக்கும் இலக்கத்தில் (7) இரண்டு குறிகளும் காணப்படுகின்றது. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, முதலிய அடிப்படை என்களில் 4ல் மட்டுமே அதிகமான (3) குறிகள் காணப்படுகின்றன. இதனால் எண் 4ல் சூரியனின் ஆதிக்கம் மிகவும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

எண் 1 ஒரு குறியானால் எண் 4ல் ஒரு குறி வேறொரு குறியால் குறுக்கே வெட்டப்பட்டு விட்டது. தனியொரு மனிதனாகிய யேசுவை சிலுவை (+)யில் அறைந்து அவன் தனித்துவத்தை அழிக்க முற்பட்டது போல் இங்கும் ஒருகுறி வேறொரு குறியால் (சிலுவையில் உள்ளதுபோல்) குறுக்கே அறைந்து தனித்துவம் மறைக்கப்பட்டது. இதனால் சூரியனுக்கு தனித்துவம் இருக்கும் போது, எண்4 குறிக்கும் ராகுவுக்கு தனித்துவம் மறைக்கப்பட்டது. எண்-1 குறிக்கும் சூரியனுக்கு சோதிடத்தில் ஒரே ஒரு ராசியை (சிங்கராசி) வழங்கி அதன் தனித்துவத்தைச் சிறப்பிக்கும் போது எண்4 குறிக்கும் இராகுவிற்கு தனித்துவமாக எந்தராசியும் வழங்கப்படவில்லை, இராகு எந்தராசியில் செல்கின்றானோ அந்தராசி அதிபதியின் பலனைக் காட்டுவான், என்னதான் வாடகை ராசியில் இராகு இருந்தாலும் தன் சுயகுணத்தைச் சிலசமயம் காட்டத்தவறுவதில்லை. சில குணாதிசயங்களைச் சூரியனிடமிருந்து பெற்றபடியால் தான் எண்4ல் தனிக்குறியும் குறுக்குக் குறியும் வேறொரு குறியினால் பிணைக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இதனால்தான் சூரியனுக்கும் இராகுவிற்கும் உரியபிணைப்பு நிலைநாட்டப்படுகின்றது. நேர்க்குறி வேறொரு குறியினால் குறுக்கே வெட்டப்பட்டிருப்பதால் (எண்4ல்) சூரியனின் முழுப் பலன்களை இராகுவிடம் எதிர்பார்க்க முடியவில்லை. இன்னொரு குறியினால், மேற்கூறிய இருகுறிகளும் (+) பிணைக்கப்பட்டிருப்பதால் (4) சூரியனும் இராகுவும் மிகத் தொடர்புள்ளவர்களாக அமைந்து விட்டனர். இப்படியாகத் தொடர்புள்ள போதிலும் இராகு கேது முதலியோருக்கு நிரந்தரமாக எந்த எண்களை வகுத்தல் முறையாகும் என்று ஆராய்ந்த போதிலும் மீண்டும் இக்குறிகளினால் பிணைப்பு ஏற்படும் எண்களே தலை தூக்குகின்றன. இக்கட்டத்தில் சூரியனுக்கும் இராகுவிற்கும் தனித்தனியே குறிக்கும் ஒருசில பலன்களை ஆராய்வோம்.

பொதுவாக சக்தி, உடல், தேகாரோக்கியம், இருதயம் முதலியவைகளை சூரியன் குறிப்பான்; சுவாசம், துடிதுடிப்பு, செயல்படுதல் முதலியவைகளை இராகு குறிப்பான். இவையாவும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து இருக்கின்றன! எப்படி?

சூரியன் இருதயத்தைக் குறித்தால், அதன் துடிதுடிப்பை (Palpitation) இராகு குறிப்பான்; மனிதன் மட்டுமல்ல எந்தவிலங்கிலும் எந்நேரமும் துடித்துக் கொண்டிருக்கும் அதாவது செயல்பட்டுக் கொண்டிருக்கும் அங்கம் இருதயமாகும். இதயத்துடிப்பிலிருந்து தான் சுவாசம் நடைபெறும். இவைகள் செயல்படுவதால் உடல் இயங்குகின்றது. சக்தி உற்பத்தியாகின்றது. சக்தி செலவாகும் போது உடலின் செயற்பாடு புலனாகின்றது. இதனால் சூரியன் இராகு முதலியோர் இணைந்து எவ்விதம் விலங்குகளின் செயல்பாடுகளில் முக்கியத்துவம் வகிப்பதை அறியலாம்?

செயல்பாடுகளில் சூரியனும் இராகுவும் பிரிக்கமுடியாமல் பின்னிப் பிணைந்திருப்பதால் தான் அவர்களுக்குரிய எண்களும் (1,4) பின்னிப் பிணைந்து கவர்ந்து நிற்கின்றன. எண்1 தனது ஒருகுறியில் நிமிர்ந்து நிற்பதுபோல் எண்4 தனது குறிகளில் ஒன்றில் மட்டும்தான் நிமிர்ந்து நிற்கின்றது. இச்சிறப்பு (கேதுவைத் தவிர்த்து எண்7ஐ தவிர்த்து) வேறுஎந்த எண்களிலும் காணப்படவில்லை, இவையாவும் சூரியன் இல்லையேல் இராகு கேது முதலியோர் இல்லை என்பதை வலியுறுத்துவதுடன் எண் 1இன் உதவியால்தான் எண்4 எண்7 யாவும் உருவாகின்றன, என்பதையும் உறுதிப்படுத்துவதுடன் இராகுவிற்கு எண்4ம் கேதுவுக்கு எண்7ம் வகுத்தது பொருத்தமென நிரூபிக்கின்றன. இதனால்தான் எண்கள் 1,4,7 யாவும் ஒரேகுடும்பத்தைச் சார்ந்தவை என்பது புலனாகின்றன.

இயல்பாக உள்ள ஒருசில தீமைகளை விடுத்தால் பொதுவாக இவர்களுக்குள் கவர்ச்சியும், ஒத்துழைப்பும் உண்டு. சூரியனும் இராகுவும் ஒன்று சேரும்போது முயற்சி, ஆற்றல் விறுவிறுப்பு யாவும் சிறப்பாய் அமையும். ஆனால் சூரியனும் கேதுவும் ஒன்று சேரும்போது அழிவும் துன்பமும்

உண்டு. இதனால் எண் 1 இன் ஆதிக்கத்தில் உள்ளவர்களுக்கும் எண் 4 இன் ஆதிக்கத்தில் உள்ளவர்களுக்கும் இடையில் நல்லகவர்ச்சியும் இசைவும் இருப்பதால் திருமணப் பொருத்தத்திற்கு மிகவும் நல்லதாகும். இதைப்பற்றிய மேலதிக விபரங்களை "எண்களும் திருமணப் பொருத்தங்களும்" எனும் விடயத்தில் ஆராய்வோம்.

முன்பு எண் 2 சந்திரனைக் குறிக்கும் என்று கூறியிருந்தேன். சூரியன் உடல் ஆனால் சந்திரன் (மூளை) சிரசாகும்: மனிதனுக்கு இவையிரண்டும் நன்கமைய வேண்டும். இதனால்தான் சூரியனும் சந்திரனும் விலங்குகளின் வாழ்க்கையில் முக்கியத்துவம் வகிக்கின்றன. இக் காரணத்தினால் சூரியனின் முக்கியத்துவத்தையும் தனித்துவத்தையும் உணர்ந்து சோதிடத்தில் ஒரேஒரு ராசி வழங்கியது போல் சந்திரனுக்கும் ஒரே ஒரு ராசி (கடகம்) வழங்கினார்கள், இராகுவிற்கு நடந்ததுபோல் கேதுவுக்கும் ஒரு ராசியும் வழங்கப்படவில்லை;

சந்திரன் மூளையை ஆளுகின்றான். மூளையில் அலைபோன்ற எண்ணங்களையும் சிந்தனைகளையும் சந்திரன் குறிப்பதால் சந்திரனுக்குரிய எண் 2-ல் ஒரு சுழி தலையாக விளங்குகின்றது. தலைதூக்கும் போது உடல் படுத்துவிடுகின்றது. கேதுவிடம் (சுழி) தலை கிடையாது. அது வெறும் (உடல்) வால் தான்! இதனால்தான் கேதுவுக்கு எண் 7 காட்சியளிக்கின்றது. எண் இரண்டிலுள்ள (தலையின்றி 2) இரண்டு குறிகள் மட்டுந்தான் எண் 7-ல் காணப்படுகின்றன. இதனால் எண் 2 ற்கும் 7ற்கும் உள்ள தொடர்பு நன்கு புலனாகின்றது. சந்திரன் சிந்தனைகளைக் குறிக்கும்போது, கேது ஞானத்தைக் குறிக்கும்; சிந்தனைகளும் சலனங்களும் அற்றபோது அல்லது அமைதி பெறும்போது ஞானம் பிறக்கின்றது. இதனால்தான் ஞானத்தைக் குறிக்கும் கேதுவுக்குரிய எண் 7-ல் (தலை) சுழி காணப்படவில்லை. இதேவேளையில் ஒளியில்லையேல் நிழல் ஏது எனும்போது எண் 2 இல்லையேல் எண் 7 ஏது? இப்படியான பிணைப்புகளும் ஒற்றுமைகளும் காணப்படுவதால் சந்திரனுக்கு எண் 2 வகுக்கப்படும்போது கேதுவிற்கு எண் 7 வகுத்தல் நியாயமாகப்படுவதுடன் எண் 2 ற்கு எண் 7 அமைகிறது. திருமணப் பொருத்தத்தில் இவ்வுண்மை நன்கு புலனாகின்றது.

(தொடரும்)

# மீன லக்கின ஆணும் கடக லக்கின் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

இக்கூட்டுறவில் இருவருக்கும் பலமான கற்பனைச் சுபாவ சக்திகள் இருக்கும். ஒரு தொந்தரவுமில்லாது ஒருவரையொருவர் புரிந்துகொள்ள இலகுவாயிருக்கும். மன எழுச்சியின் பாதுகாப்புத் தேவை இருவரிலும் முக்கியமாகவிருக்கும். இதுவும் கொஞ்சம் பிரயத்தனமும் சேர்ந்தால் ஒரு அந்நியோன்ய கூட்டுறவை உண்டாக்கும். சேதப்படுத்தப்படக்கூடிய பிராணிகளில் மீன லக்கின காரருக்கு மிகவும் அன்பிருக்கும். இல்லிடம் இல்லாமல் அலைந்து திரியும் நாய்கள், பூனைகள் போன்ற பிராணிகள் எல்லாவற்றிற்கும் இவர்களுடைய வீடு புகலிடம் கொடுக்கும்.

ஒரு காரணமுமில்லாத சோர்வு மனப்பாங்கு சடுதியாக வந்து நேரிடும். ஏதோ அற்ப காரியத்தால் தூண்டப்படும். இந்த நேரத்தில் அவனுக்குத் தேவையானது அதிக அன்பும் விளக்கத் தன்மையும். அத்துடன் அவளால் கூட்டிச் சேர்க்கக்கூடிய திட நம்பிக்கையும். சங்கல்பத்துக்காக உலகம் அவனைக் கணிக்கும் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் அவன் உணருவான். அவளின் உணர்ச்சி போலத்தான் அவனும் அவளைப்பற்றி உணர்வான். இந்த மனிதனை அதிகம் கண்காணிக்க வேண்டும். ஏனெனில் மனச் சோர்வுற்ற காலங்களில் இவன் மது அருந்துவதிலும், புகைத்தலிலும்இரகசியமாகச் செய்யவேண்டியதை படாடோபமாகச் செய்வான். உலகாயத சுபாவம் அவளில் கூடுதலாகவிருந்தாலும் அவள் அவற்றை உவகையாகப் பல சந்தர்ப்பங்களிலும் பாவனைக்குப் பிரயோசனப்படுத்துவாள்.

பாலியல்பில் கற்பனாசக்தி முக்கிய இடத்தை வகிக்கும். அவர்களுடைய சுபாவத்தில் இந்த விடயம் மிகவும் விருத்தியாகியுள்ளது: இவை காதல் லீலைகளாக உருவெடுக்கும், இருவருக்குமிடையில் இவர்களுடைய உடலழகு ஒன்றையொன்று ஈர்க்கும். ஏற்கெனவே அவர்களுக்குள்ள உறவை இன்னும் கூடுதலாக இப் பாலியல் வாழ்வு ஏற்படுத்தும்.

# ஜாதகத்தில் சனி

வி. எஸ். வேலாயுதன் – கி. மா.

## பூர்வகதை:-

சனி சூரியனுக்கும் சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவன். தனக்கொரு மகன் பிறந்துவிட்டான் என்ற ஆதங்கத்தோடு அவனைக் காணச்சென்றான் சூரியன். சனீஸ்வரனோ தன் பிரிய தந்தையிடமும் தன் விஷமத்தனத்தைக் காட்டத் தவறவில்லை. சூரியபகவானுக்குக் குஷ்டரோகத்தையும் அவனது தேர்ப்பாகனுக்குக் கால் முடக்கத்தையும் ஏற்படுத்திவிட்டானும். இங்கு ஒரு விசேடம் என்னவென்றால் சனி ஒருவருக்குக் கால்முடத்தை உண்டுபண்ணி; தாமே "முடவன்" என்ற நாமத்தை ஏற்றுக்கொண்டமையாகும். ஒருயாகத்தில் சனிக்கு ஒருகண்போயிற்று என்றும் கூறுவர்.

## வானவியலாளர் கூற்று:-

வானவியலாளர் கூற்றுப்படி சனிக்கிரகம் பூமியினிருந்து வெகு தொலைவில் இருப்பதாக அறியப்படுகிறது. வியாழனுக்கும் வானவெளிக்கும் (Firmament) இடையில் பார்வைக்குப் பெரியதொரு நட்சத்திரமாகத் தோற்றமளிக்கிறது என்பர். இவரது நிறம் பிரகாசமற்று மங்கலாக இருக்கும். தூரதரிசினி மூலம் உற்று நோக்குமிடத்து சனிக்கிரகமானது பார்வைக்குப் பல்வேறு நிறங்களையுடைய பந்துபோல் தோற்றமளிக்கும். ஆனால் உண்மையில் இது வட்டமானதாகவோ அன்றேல் ஏனைய கிரகங்களைப்போல் தட்டையானதாகவோ இல்லை. இவர் விண்வெளியின் வட்டப் பாதை (Orbit) யினூடாகச் செக்கன் ஒன்றுக்கு 6 மைல் வீதம் பிரயாணம் செய்கிறார்.

மந்தகதியுடைய மந்தனாகிய சனி இராசி ஒன்றினை இரண்டரை வருடங்களிலும் இராசி மண்டலத்தை 30 வருடங்களிலும் கடந்து செல்வர். அதாவது ஒருமாதத்திற்கு ஒரு பாகையாகவும் ஒருநாளைக்கு 2 கலையாகவும் இவரது பயணம் அமைகிறது என்பதாம்.

## காரகத்துவம்:-

சனி அஜீரணம், நோய், கவலை, துன்பம், நீடித்த துயர், பெருங்கோபம், வன்மனம், துற்பலம், ஆயுள், ஆபத்து, அவஸ்தை, வாதம், சருமம்(Skin), தப்பபிப்பிராயம், பெண்களால் மகிழ்ச்சிக்குறைவு, அடிமைத்தளை, பிறர் தயவு, இழிகுலம், தீயோர் நட்பு, சிசிருது – பின்பனிக் காலம், கருந்தானியங்கள், சாம்பல், கந்தை ஆடை, அழுக்கிடம் என்பவற்றுக்குக் காரகத்துவமாக–காரணமாக இருப்பர்.

சனிபகவான் மகரகும்ப இராசிகளைச் சுய வீடுகளாகவும் துலாராசியை உச்ச வீடாகவும் கொண்டவர். பூசம், அனுஷம், உத்தரட்டாதி என்பன சனியின் நட்சத்திரங்களுமாம். புதன் சுக்கிரன் இருவரையும் நண்பர்களாகவும், செவ்வாய், சூரியன், சந்திரன் ஆகியோரை பரமவைரிகளாகவும் உடையவர். இலக்கினத்திற்கு 7-ம் வீட்டில் திக்பலம் பெறுவர். பார்வையில் தீமை விளைவிக்கும் பாங்கினரான சனிபகவான் தமது 3, 10-ம் பார்வைகளால் கசப்பான தீச்செயல்களைத் துணிந்து செய்வார். ஆனால் வக்கிரியாகும்போது பாவச்செயல்களை மிதமாகவே செய்வர்.

## எண்கலையில் சனி:-

நவ எண்களுள் 8-ம் எண்ணைக் குறிப்பவர் இவர். எண் 8இன் ஆதிக்கத்தில் பிறப்பதற்கு ஒருவர் முற்பிறவியில் கொடுத்து வைத்தவராக இருக்கவேண்டும். இளமையில் பெற்றோருக்குத் துன்பம், நோய்நொடிகள் என்பதெல்லாம் உண்மைதான். இவை ஒருபுறமிருக்க சொற்ப காலத்திற்காயினும் சற்று எழுப்பமாக பிரகாசமாக பிறர் மெச்சுமளவிற்கு வாழ்ந்தால் போதாதா? இதற்காகத்தான் எண் 8 இன் ஆதிக்கத்தில் ஒருவர் பிறக்கவேண்டும் என்கிறேன். இங்கு 8-ம் எண்ணின் ஆதிக்கம் என்னும்போது பிறப்பு எண் 8 இன் மூலகலப்பு எண்களாகவும் அது ஒருசனிக்கிழமையாகவும் ஜாதகத்தில் சனி, மகர கும்ப துலா ராசிகளை 1, 2, 4, 7, 10-ம் வீடுகளாகவும் கொண்டிருக்க வேண்டுமென்பதாம். அப்பொழுதுதான் நாம் ஒருவரைச் சனி ஆதிக்கர் எனத் துணியலாம்.

சனி ஒருவரை எந்த அளவுக்கு உயர்வான நிலைக்கு இட்டுச் செல்கின்றதோ அவ்வண்ணமே தாழ்நிலைக்கும் தள்ளிவிடுகின்றது. திடீர் ஏற்ற இறக்கத்திற்கும் இவரே காரணர் ஆகிறார்.

ஏழ்மை நிலையிலுள்ள ஒருவர் துறவுபூணத்துணிவதும் சனியின் சோதனைதான்.

சனிபகவான் சிறந்த எஜமானன் மட்டுமன்றி பயபக்தி மிக்க ஊழியனுமாவார். அவர் உயர்ந்த கொள்கைவாதி மட்டுமல்லாது பயபக்தி மிக்க ஊழியனுமாவார். அவர் உயர்ந்த கொள்கைவாதி மட்டுமல்லாது சிறந்த தத்துவ ஞானியுங்கூட. ஆனால் இரக்கம் நம்பிக்கை இரண்டுமற்றவர். ஆயினும் மனஉறுதி மிக்க இவர் சமாதானமும் மனிதாபிமானமும் கொண்டவர். மேலும் நன்நடத்தை காலந்தவறுத கடமை உணர்வு, நேர்மை, சாதுரியம், ஆகிய உயர் பண்புகள் இவர்பால் உண்டு. இதை மறுவார்த்தையில் கூறினால் பூரண சனி ஆதிக்கர் ஒருவரிடம் இத்தியாதி குணவியல்புகளை எதிர்பார்க்கலாம் என்பதாம்.

**சனி ஆதிக்கரின் பொது இலட்சணம்:-**

நாம் முன் கூறியாங்கு ஒருவரின் ஜாதகத்தில் சனி நன்நிலையில் அமருமிடத்து மெலிந்து உயர்ந்த தோற்றமுடையவராக இருப்பர். உடம்பில் உரோமம் அதிகரித்துக் காணும். முகம் பரந்தும், தாடை அகன்றும், பற்கள் பருத்தும் இருக்கும். பொதுவாக இவர்கள்பால் மதிநுட்பம், ஞாபகசக்தி, வாக்குச்சக்தி(Intutive Power) நடுநிலை, நியாயாதிக்கம் என்பன சிறந்துகாணும்; சமயம், இலக்கியம், தத்துவம் இவைகளில் ஆர்வம் இருக்கும். பச்சாதாபமும், பரிந்துணர்வும், பிறர்க்குதவும் பாங்கும் இவர்களின் இயற்கைக் குணவியல்புகளாக அமையும்.

சனி ஆதிக்கமுள்ள பிள்ளைகள் இளமையில் மந்தமும் சுறுசுறுப்பும் அற்றவர்களாகவேகாணப்படுவார்கள். சிலரிடம் பயந்த சுபாவமும் கோழைத்தனம், திறமையைக் காட்டுவதில் தயக்கம், நாணம் ஆகிய பிற்போக்குக் குணங்கள் காணப்படும். இத்தகையோருக்கு சிறிது தன்னம்பிக்கை, துணிவு இரண்டையும் ஊட்டிவிட்டாலே போதும். தமது திறமை, விடாமுயற்சி, சாதுரியம் இவற்றின் துணைகொண்டு ஒரு V. I. P.(Very Important person) ஆகவே வந்துவிடுவர்.

பன்னெடுங் காலமாகச் சனி மிகக் கொடூரமான ஒருவராகவே கருதப்பட்டு வந்துள்ளார். சாதாரண மனித வாழ்க்கையில் மட்டுமல்லாது அரசியல் சமுதாய நிலைகளிலும் பெரும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் உண்டுபண்ணுபவர் சனிபகவானே என்பது மறுக்கொணு உண்மையாகும். ஆனால் அவர் எல்லார்க்கும் எல்லாக் காலத்திலும் தீமை விளைவிப்பவர் அல்லர்; மாருக எதிர்பாராத அளவுக்கு நற்பலன்களையும் வழங்குபவர் என்பது அநேகமானவர்கள் அறிந்திராத உண்மையாகும்.

இவர் ஒருவரது ஜாதகத்தில் மகரத்தில் நிற்குமிடத்து புத்திதீட்சண்யம், குடும்பஅமைதி, பூமிப்பேறு, வியாபார முன்னேற்றம், அறிவு விருத்தி என்பனவும் கும்பத்தில் நிற்குமிடத்து அரச உதவி, ஆதரவு, கௌரவம், உயர் நிலை, ஒழுங்கான வாழ்க்கை, தெளிந்த மனம், தத்துவ விசாரம் என்பனவும், துலாத்தில் நிற்குமிடத்துப் பிரபலம், வெகுஜன பூஜிதம், செல்வ விருத்தி, அதிகாரம், சுதந்திர வாழ்வு, பெருமை என்பனவும் உண்டாம். இடபம், தனு, மீனம், இவற்றில் சனி நிற்குமிடத்து மிதமான நற்பலன்களையே வழங்குவர். இடபத்தில் பலவகைப் பொருட்பேறு, விவசாய முன்னேற்றம், சகல காரிய சித்தி, இராஜயோகப் பேறு என்பனவும் தனுவில் நிற்குமிடத்து அதிக சம்பாத்தியம், உண்மை, தருமசிந்தை, நற்குணவியல்பு, சமய வாழ்வு, சுகம் செல்வம் என்பனவும் உண்டாம். மீனத்தில் இவர் நிற்குமிடத்து திறமை, செல்வம், மகிழ்ச்சி நற் களத்திரப் பேறு என்பன உண்டாம்.

பொதுவாக ஒருவரது ஜாதகத்தில் சனி 2-4-7-10 ஆகிய இடங்கள் ஒன்றில் இருக்கவேண்டும். அவை முன்கூறிய வீடுகளாகவும், இருக்கவேண்டும்; பின்னர் வேறு பேச்சுக்களுக்கே இடமில்லை. சனி பகவான் தடையின்றித் தமது கடமையைச் செவ்வனே செய்து வைப்பார்.

இனி நமக்குக் கிடைத்த புகழ்பெற்ற உலகத் தலைவர்களின் சாதகத்தில் சனி எந்த அளவுக்கு ஆதிக்கம் செலுத்தி அவர்களை உயர்நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளான் என்பதை நோக்குவாம்.

(தொடரும்)

---

சந்திரனின்......... (18-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியெல்லாம் சிறப்புவாய்ந்த சந்திரனுக்கு மனிதன் சென்று திரும்பினன் என்று கூறப்படுவதை சில விஞ்ஞானிகள்கூட நம்புகிறுர்களில்லை. விண்வெளியில் வெகுதூரம் பயணம் செய்து இடையில்வந்த ஒரு திட்டில் இறங்கி இருக்கலாம். இந்தத் திட்டு சந்திர மண்டலமா அல்லது ஆவி உலகத்தின் திட்டா என்பதைப் பொறுத்துத்தான் பார்க்கவேண்டும்.

கட்டுரைப் போட்டி                                                    பரிசு ரூபா: 50/-

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுடன் 'சோதிட மலருக்கு' 10-வது ஆண்டு ஆரம்பமாவதையொட்டி இக்கட்டுரைப் போட்டி இடம்பெறுகின்றது.

## ★ "வாழ்க்கையில் விரதங்கள்" ★

போட்டி நிபந்தனைகள்:

1. மேலே தரப்பட்டுள்ள தலைப்பின் கீழ் கட்டுரை எழுதப்படவேண்டும்.
2. கட்டுரைகள் புல்ஸ்காப் தாளில் ஏறக்குறைய ஐந்து பக்கங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
3. பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைக்கு ரூபா 50/- ரொக்கப் பரிசு வழங்கப்படுவதுடன் பரிசுக் கட்டுரை ஆண்டு மலரில் பிரசுரிக்கப்படும்.
4. கட்டுரைகள் 31-3-87க்கு முன்னதாக எமக்குக் கிடைக்கவேண்டும்.
5. போட்டிபற்றி ஆசிரியர் குழுவின் தீர்ப்பே முடிவானது.

கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி: கட்டுரைப் போட்டி, 'சோதிட மலர்'
திருக்கணித நிலையம்,
மட்டுவில், சாவகச்சேரி.

# "சோதிட மலர்"

## 10-வது ஆண்டுச் சிறப்பு மலர்

எதிர்வரும்
சித்திரைப் புத்தாண்டுடன்
சோதிடமலருக்கு 10-வது ஆண்டு ஆரம்ப
மாவதனையொட்டி சித்திரையிதழ் சிறப்பு மலராக வெளி
வரவுள்ளது. இச்சிறப்பு மலரை மேலும் மெருகூட்டி பலவிதகோணங்
களில் பல்சுவை ஆக்கங்களையும் ஒருங்கே தாங்கி வெளிவரச் செய்வது வாசகர்களா
கிய உங்களின் கடமையல்லவா? உங்கள் சிந்தனையில் உதிக்கும்
பல்வேறு படைப்புக்களையும் அன்புடன்
வரவேற்கின்றோம்.

Registered as a News Paper at the G. P. O. [illegible]

[illegible]

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | ரூ | 42-00 |
| | [illegible] | [illegible] | „ | 18-00 |
| | [illegible] | [illegible] | „ | 180-00 |
| | [illegible] | [illegible] | „ | 216-90 |

[illegible]

Edited by [illegible] Printed and Published by [illegible] Sri Lanka. [illegible]

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.





சென்ற காலமும்,

இனி வருங்காலமும்,

மில்க்வைற் தொழிலகம்

இன்றுவரை செய்துவந்த சேவைகளின் பழுதிலாச் சிறப்புக்கு உங்கள் அமோக ஆதரவே காரணமாகும். அதுபோல் இனிவருங் காலத்துப் பெருஞ் சேவைக்கும் உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை. நீங்கள் இது வரை கொடுத்துவந்த நல்லாதரவிற்கு நன்றி.

**மில்க்வைற் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி 23233


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ 42-00 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, 180-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, 225-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280